www.padippakam.com


# நற்றமிழ்


விலை உரு 6.00 இலக்கிய இலக்கணத் திங்களிதழ்


தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்-புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள் - அறிஞர் சாலை இளந்திரையனார்


ஆண்டு-சு திங்கள் - உ தி.ஆ.உ0நஎ மீனம் (பங்குனி) (15-3-2006)

ஆசிரியர் : 'தமிழ்மாமணி' புலவர் மு. இறைவிழியன்

இணையாசிரியர்கள் : புலவர் அரங்க. நடராசன், புலவர் செ. இராமலிங்கன்

நல்லாராய் வல்லாராய்ப் புதுவை ஆண்டார்
ந. அரங்கசாமி யென்னும் எளியர் நன்றே!
பொல்லாரின் சூழ்ச்சியெலாம் பொடிகள் ஆக்கிப்
பொழுதெல்லாம் மக்கட்கே உழைத்தார் தூயர்.
எல்லாரும் அவர்புகழைப் பாடு கின்றார்
ஏழைகளின் உயர்வுக்கே திட்டம் கண்டார்
நல்லநெறி அரசியலுக் கவரே சான்று
நாட்டோரே அவர்தொண்டைத் தொடரச் செய்வோம்.

– இறைவிழியன்

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு. -பாரதியார்

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே! -பாவேந்தர்

www.padippakam.com



# வேற்றுமையில் ஒற்றுமை மக்களவையில் ஒலித்த 15 மொழிகள் ஒளி தோன்றிவிட்டது; வழி பிறந்துவிடும்

**இந்திய** அரசின் நாடாளுமன்றத்தில் பிப்ரவரி 21 ஆம் நாள் உலகத் தாய் மொழி நாளாகக் கொண்டாடப்பட்டது. அன்று அவரவர் தாய்மொழியில் நாடாளுமன்ற உறுப்பினர் பேசினர். உணர்ச்சியும் மகிழ்ச்சியும் கரைகடந்து பெருகினவாம். நாடாளுமன்றத்தலைவர் தம் தாய்மொழியாம் வங்க மொழியில் பேசிப் பெருமகிழ்வடைந்தாராம். இதுதான் உண்மைநிலை. அதைவிட்டு இந்தியாவிற்கு ஒரே மொழி ஆட்சிமொழி எனப்பேசி மாநில மொழியான இந்தியை எல்லா மாநிலத்திலும் திணித்தல் தகாது என்பதை உணரும் காலம் வந்துள்ளது மகிழத்தக்கதே.

பாக்கித்தானோடு இணைந்திருந்த வங்காள நாட்டின் தலைநகரான தாக்காவில் தம் தாய்மொழி ஆட்சி மொழியாக வேண்டும் என அந்நாட்டு மக்கள் போராடினர். அப்போராட்டத்தில் கலந்து கொண்ட அந்நாட்டு மாணவர் பலர் துப்பாக்கிச் சூட்டில் பலியாயினர். அந்த நிகழ்வினை இந்திய வங்காளத் தலைவர்கள் உலகத்தாய் மொழி நாளில் நாடாளுமன்றத்தில் நினைவு கூர்ந்து தம் தாய் மொழிப்பற்றை உலகுக்கு உணர்த்தியுள்ளனர். அத்தலைவர்கள் பாராட்டுக் குரியவர்களே!

வேறு ஒரு நாட்டில் நடந்த தாய்மொழிப்போர் நம் நாட்டில் நினைவு கூரப்படுகிறது ஒரே தாய்மொழி என்ற அடிப்படையில் ஆனால் இந்த நாட்டிலேயே உள்ள ஒரு மாநிலத்தில் தம் தாய்மொழி வளர்ச்சிக்காகப் பல போராட்டங்கள் நடந்துள்ளன; நடந்து வருகின்றன. மக்களும் மாணவர் பலரும் மடிந்துள்ளனர். உலகமே வியக்கும் அளவில் தம் தாய் மொழிக்காகத் தீக்குளித்த மறவர் பலர் தமிழரே. ஆனால் நாடாளுமன்றத்தில் அம்மறவர்கள் நினைவு கூரப்பட்டார்களா? அன்னார்க்கு அஞ்சலி செலுத்தப்பட்டதா? 40 நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தனரே ஒருவர் கூட அம்மறவர் பற்றிக் குறிப்பிடவில்லையே! ஏன்? "தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!" எனக் கூவிக் கொண்டே நகரச் சாலையில் தீயில்கருகிய அந்த மாமறவர்கள் நம் நெஞ்சில் இன்றளவும் நிறைந்துள்ளனரே! தமிழகத் தலைவர்களே உங்கள் இயக்க உறுப்பினர்கட்கு அஞ்சலி செலுத்த ஆணையிட எண்ணம் வரவில்லையா? அந்த மறவரின் ஈகத்தின் மேல் அமர்ந்து தானே கொடிகட்டிப் பறக்கிறீர்கள். அத்தனையையும் மறந்து விட்டக் கல்நெஞ்சக்காரர்களா நீங்கள். இதற்கெல்லாம் உங்கட்குக் காலம் விடை கூறும். தமிழர்களே! வங்காளத்தலைவர்கள் வழிகாட்டியுள்ளனர். உலகத்தாய்மொழி நாளை அடிப்படையாகக் கொண்டு நம் தாய்மொழியாம் தமிழுக்குரிய சிறப்பினை நாம் பெற முயல்வோம்!

வங்காள நாட்டில் நடந்த நிகழ்ச்சிக்கு இந்தியாவில் சிறப்பேற்புரை ஏனென்றால் வங்காளிகள் இந்த நாட்டு ஒரு பகுதி மக்களின் பங்காளிகள். பாராட்டுகிறோம். இதே நிலைதான் ஈழத்திலும். அங்குத் தமிழர்க்கு வாழ்வுரிமை, மொழியுரிமை மறுக்கப்படுவதால் போராடுகின்றனர். அவர்கள் இங்குள்ள தமிழர்களின் பங்காளிகள் ஆவர். அவர்க்கும் துணையிருக்க வேண்டியது இந்திய அரசின் கடமையன்றோ!

ஒளி தோன்றியுள்ளது. நாடாளுமன்றத்தில் 15 மொழிகள் ஒலித்துள்ளன. எனவே அனைத்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அவரவர் தாய்மொழியில் பேசப்படும் நிலை ஏற்படும் என நம்புகிறோம். மாநிலங்களில் தாய்மொழியும் துணைமொழியாக ஆங்கிலமும் பயன்படுத்தப் படும். இந்தியாவில் ஒருமொழி ஆட்சி என்பது மறைந்து இந்தித் திணிப்பு அழிந்து உண்மையான மக்களாட்சி மலரும் என்பதை 21 ஆம் நாள் நாடாளுமன்ற நிகழ்வு உணர்த்துகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# கலிப்பாப் பற்றித் தொல்காப்பியர் கூறுவன

கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலய்யர் (தொடர்ச்சி)

(இக்கட்டுரைத் தொடர் சென்ற இதழில் பக்கம்மாறிட அச்சிடப் பட்டிருந்ததால் மீண்டும் அப்பகுதி சரியாக்கி வெளியிடப்படுகிறது. பொறுத்தருள்க. ஆசிரியர்)

தேவர்ப்பராஅய முன்னிலைக்கண்ணே வரும் ஒத்தாழிசைக் கலியின் பிரிவாகிய கொச்சக ஒருபோகு என்னும் கலிப்பா தரவு உறுப்பு இன்றித் தாழிசை பெற்றும், தாழிசைஉறுப்பு இன்றித் தரவு உடைத்தாகியும், அம்போதரங்க உறுப்பு இன்றியும், தனிச்சொல் இல்லாமலும், சுரிதக உறுப்பு இன்றியும் நாற்சீர் அடியினும் மிக்கு ஐஞ்சீரடி முதலாக ஓங்கி நடைபெற்றும் கலிஉறுப்பிற்கு ஓதிய யாப்பியல்புகளாலும் பொருள் அமைதியாலும் வேறுபட்டு வருவதாகும்.

பொருளமைதியில் வேறுபடுதலாவது தேவர்ப்பராஅய முன்னிலைக்கண் வருதலே அன்றி ஏனைய இடத்ததாகி வருதலும் மக்களைப் பராவி வருதலும் அகமும் புறமுமாகிய பொருளைத் தழுவி வருதலும் பிறவும் ஆம்.

தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை இன்றித் தரவுடைத்து ஆகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னம் இன்றியும்
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது
கொச்சக ஒருபோகு ஆகும் என்ப - 149

(எ.டு) பரணிச் செய்யுள் - தாழிசை தனித்து வந்தது.
யானைத்தோல் போர்த்து
வரிவளைக்கை வாள்ஏந்தி - தாழிசை மூன்று அடுக்கி வந்தது.
சங்கமும் சக்கரமும் - சிலப். வேட்டுவவரி
நீறணிந்த திருமேனி - தரவு மட்டும் வந்தது.
மூவுலகும் ஈரடியான் - தாழிசை அடிநிமிர்ந்து வந்தது.
மழைநுழைந்து - தரவுஅடி நிமிர்ந்து வந்தது.
முழங்குதிரை - மக்களைப் பரவி வந்தது.
ஆறறி அந்தணர் (கலி 1) - ஒத்தாழிசைபோல வந்த தேவபாணிக் கொச்சகம்.
மாமலர் முண்டகம் (கலி 133) - தரவும் எண்ணும் சுரிதகமும் பெற்று அகப்பொருட்டாய் வந்தது.
பால்மருள் மருப்பின் (கலி 23) - தரவும் சுரிதகமும் பெற்ற கொச்சக ஒருபோகு.
செவ்விய தீவிய (கலி 19) - வெண்பா யாப்பின் வந்த தரவிணைக் கொச்சகம்.
நிரைதிமில் களிறாக (கலி 149) - மூன்றடித்தரவு நான்கடித்தாழிசை இரண்டு தனிச்சொல் சுரிதகம் பெற்று வேறுபட்டு வந்தது.

www.padippakam.com



அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகும் கொச்சக ஒருபோகிற்குச் சிறுமை பத்தடி; பெருமை இருபதடி எனப்படும்.

**ஒருபான் சிறுமை; இரட்டி அதன் உயர்பே - 150**

இனி ஒருபோகின் மற்றொருவகையாகிய அம்போதரங்க ஒருபோகின் பேரெல்லை அறுபதடி; சிற்றெல்லை முப்பதடி. சிற்றெல்லை பதினைந்தடி என்பது பொருந்துவதாக இல்லை.

அம்போதரங்க ஒருபோகு தரவு கொச்சகம் அராகம் சிற்றெண் சுரிதகம் என்ற ஐந்து உறுப்புக்களை உடையதாய் வரும். கொச்சகங்கள் வெண்பாவாகவும் வரும்

**அம்போ தரங்கம் அறுபதிற்று அடித்தே;**
**செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை - 151**

செம்பால் - நேர்பாதி, வாரம் - வருதல்

**எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்**
**அடக்கியல் வாரமோடு அந்நிலைக்கு உரித்தே - 152**

இதுகாறும் கூறியவாற்றால்,

அகநிலை ஒத்தாழிசைக்கலி நான்கடி முதல் பன்னிரண்டடி வரை நீளும் தரவும், தரவைவிட அடிகளில் குறைந்த மூன்று தாழிசையும் தனிச்சொல்லும் தரவை ஒத்தோ அதனினும் குறைந்தோ வரும் அடிகளை உடைய சுரிதகமும் பெற்று வருதல் பெரும்பான்மை எனவும்,

தேவபாணி ஒத்தாழிசை வண்ணகம் ஒருபோகு என இரு வகைப்படும் எனவும்,

வண்ணக ஒத்தாழிசை 4, 6, 8 என்ற இரட்டைப்படை எண்களில் அமைந்த தரவும் தரவில் சுருங்கிய ஒத்த மூன்று தாழிசையும் பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண் எனப்படும் அம்போதரங்கமும் தரவினை ஒத்த அடிகளை உடைய சுரிதகமும் பெற்றுவரும் எனவும்,

தனிச்சொல் இல்லாதவழி அம்போதரங்கம் இன்றியும் தரவு தாழிசை சுரிதகம் என்ற மூன்று உறுப்போடும் வரும் எனவும்,

தேவபாணியின் பிறிதொருவகையாகிய ஒருபோகின் இரு வகையினுள் கொச்சக ஒருபோகு பலதிறப்பட்டு யாப்பினும் பொருளினும் வேறுபட்டு வரும் எனவும்,

அம்போதரங்க ஒருபோகு தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண், சுரிதகம் இவற்றொடு வரும் எனவும் அறிகிறோம்.

வாழ்த்தியல் முதலாக எல்லாப் பொருள்மேலும் வரும் நெடுவெண்பாட்டினைப் போலாது அகத்திணை ஒன்றையே பற்றியும் தரவு உறுப்புப்போல ஒரே உறுப்புப்பற்றியும் ஒரோவழிப் பிறதளை விரவியும் ஒரோவழி ஐஞ்சீரடி விரவியும், ஒத்தாழிசைக்கலிப்பாவிற்கு ஓதிய பன்னிரண்டு அடிக்கும் வண்ணகத்திற்கு ஓதிய எட்டடிக்கும் இடைப்பட்ட பத்தடியைத் தன் சிறுமைக்கு எல்லையாகக் கொண்டு வருவது கலிவெண்பா என்ற கலிப்பா ஆகும். - தொடரும்

www.padippakam.com



# மண்ணுலக வாழ்வு : வள்ளுவரும் பிளேட்டோவும்

முனைவர் **ப. மருதநாயகம்,** இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

(தொடர்ச்சி)

ஒருவன் எத்தகைய கொடுமையை நமக்குச் செய்திருப்பினும் அவனுக்கு நாம் கொடுமை செய்தல் ஆகாது. கிரிடோ, நீ சொல்வதை உண்மையில் நம்புகிறாயா என்பதை மீண்டும் சிந்தித்துப்பார். இக்கருத்தை யாரும் ஏற்றுக் கொண்டதில்லை, பலர் இதனை ஏற்றுக் கொள்ளப் போவதும் இல்லை. இதனை ஒத்துக் கொள்பவர்க்கும் ஒத்துக் கொள்ளாதவர்க்கும் உள்ள இடைவெளி பெரிது. அதனால் அவர்களுள் ஒரு சாராரை மற்றவர் வெறுக்கவே செய்வர். பழிக்குப்பழி வாங்குதல் எப்போதும் தவறு எனும் என் முதல் கொள்கையை நீ ஏற்றுக் கொள்கிறாயாவென்பதை எனக்குச் சொல். அஃதே நமது கலந்துரை யாடலின் முதல் கூற்றாக இருக்கலாமா? (பிளேட்டோ 216)

பல வினாக்களுக்கும் விடைகளுக்கும் பிறகு, பெருந் தயக்கத்தோடு சோக்ரதர் மெய்ப்பிக்க முற்படுவது நற்பண்புடையோன் பழி தீர்த்துக் கொள்ள நினைத்தல் கூடாது என்பதே. வள்ளுவர் இதற்குமேலும் ஒருபடி சென்று ஒருவன் தன் பகைவர்களுக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்பார். தீங்கைப் பொறுமையாக ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல் தண்டனை பற்றி எண்ணாதிருப்பதோடு மட்டுமல்லாமல் பதிலுக்கு நன்னம் செய்து நடந்ததை மறந்து விடுக என்று அறிவுரை கூறுவார் வள்ளுவர்.

**சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள். (311)**

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல். (314)**

**அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை. (315)**

இறப்பை எதிர்நோக்கியிருக்கும் போது சோக்ரதர் தமது நண்பர்களிடம் ஓர் உண்மையான தத்துவஞானி மரணத்தைக்கண்டு அஞ்ச மாட்டானென்றும் மரணம் தூக்கத்தைப் போன்றதென்றும் தூக்கத்தின்பின் விழிப்பைப் போன்று மரணத்திற்குப்பின் வாழ்க்கை உண்டென்றும் விளக்குவார்.

**நல்லது; விழித்திருப்பது தூக்கத்திற்கு எதிரானது போல் உயிரோடிருந்தற்கு எதிரான ஒன்று இருக்க வேண்டுமல்லவா?**

www.padippakam.com



தூங்கும் நிலை விழித்திருக்கும் நிலைக்கு எதிரானது தூக்கத்திலிருந்து விழிப்புப்பிறக்கின்றது; விழிப்பிலிருந்து தூக்கம் தோன்றுகின்றது.....

உயிரோடிருப்பார் இறந்தோரிலிருந்தும் இறப்பார் உயிரோடிருந்திருந்தாரிலிருந்தும் வருகின்றனர் என்ற முடிவுக்கு நாம் வர வேண்டியுள்ளது.

இது உண்மையானால் இறந்தவர்களின் ஆன்மாக்கள் ஏதோ ஓரிடத்தில் இருப்பதும் அவை அங்கிருந்து மீண்டும் வருவதும் உண்மைகளென்று மெய்ப்பிக்கப்படுகின்றன. (பிளேடோ 227)

நீண்ட விளக்கங்களோடும் வினா விடைகளோடும் சோக்ரதர் சொல்லும் கருத்தை அதே உருவகம் தந்து எளிதாகச் சொல்லிச் சொல்கிறார் வள்ளுவர்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (339)

மரணம் பற்றிய அச்சத்தைப் பொருளற்றது என்று எடுத்துச் சொல்கிறார்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு (336)

மறுபிறவி பற்றிய கருத்து எதையும் அவர் முடிந்த முடிவாக ஏற்றுக்கொள்ளவில்லையென்பதும் தெளிவாகிறது. ஓர் உடலில் குடி புகுந்த உயிர்க்கு என்றும் தங்கியிருக்கக் கூடிய இடம் ஒன்றில்லையா என்றே கேட்கிறார்.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (340)

குடியரசின் இறுதியிலும் வேறு சில உரையாடல்களிலும் பிளேடோ ஆன்மா அழிவற்றது, அழிக்க முடியாதது, எல்லா நன்மைகளையும் தீமைகளையும் தாங்கிக் கொள்ளக் கூடியது என்று கருத்தறிவிப்பார். ஆன்மா தெய்விகத் தன்மை உடையது எனினும் ஒரு பிறவியில் செய்த பாவங்களுக்காகப் பல பிறவிகளில் உடலோடு ஒட்டியிருக்க வேண்டிய இழிநிலைக்குத் தள்ளப்படுகிறது. என்பதில் பிளேடோ நம்பிக்கை உடையவர். மரணத்திற்குப் பின் தெய்வத்தின் தீர்ப்பிற்கேற்ப இன்ப துன்பங்களைத் துய்த்தல், மகிழ்வுறுதல், தீயோர் துன்புறுதல், ஒரு பிறவிக்கும் அடுத்ததற்கும் ஆயிரம் ஆண்டு இடைவெளி, இறுதியில் தூய்மைபெற்ற ஆன்மாவின் விடுதலை ஆகியவை பற்றிய தமது நம்பிக்கைகளைப் பிளேடோ தொன்மங்களின் மூலம் தெரிவிக்கிறார்.

- தொடரும்

www.padippakam.com



# நற்றமிழ் ஆசாற் களித்தனன் நன்றி

அன்பிற் சிறந்தீர்! ஆன்ற வணக்கம்!
இன்பத் தமிழ்மா மணியெனும் விருதை
மதுவளர் புதுவை மாத்தமிழ் அரசு
மதித்துமக் களித்தே மாப்புகழ் பெற்றது!
அதனைப் போற்றும் விதமாய்த் தாங்கள்
இதமாய் வாழ்ந்த இன்தமிழ் வாழ்வை
"வாழ்வும் பணியும்" என்ற தலைப்பில்
சூழ்கடல் ஞாலம் போற்றும் நூலாய்
ஆக்கிப் படைத்தீர்! அதனை எனக்கும்
பாக்கிய மாகப் பைந்தமிழ் ஆசான்
ஆ.சி. மூலமாய் அனுப்பித் தந்த
மாசிலாத் தங்கள் மாண்பார் உளத்தைப்
போற்றிப் பணிந்தனன்! பொலிந்திடும் நூலில்
சாற்றிய சான்றோர் உரையெலாம் உண்மையே!
எனினும் அவற்றுள் இரண்டைப் பற்றி
இனிதாய் எடுத்துநான் இயம்ப எண்ணுவன்!
புவனி போற்றிடும் இரா.திரு.முருகனார்
தவமாய் எழுதிய கட்டுரை இறுதியில்
"இறைவிழி இலையேல் இங்கிலை நானே"
நிறைவாய் நன்றி இயம்புவன் என்றார்;
அவர்போல் திரைப்பட இயக்குநர் விசுவே
நவமாய் எழுதிய நல்லதோர் அஞ்சலில்
"என்னைச் சுட்டது இறைவிழி யன்றே"
என்றே சொன்ன அவ்விரு வர்உரை
சாலும் நுங்கள் பணிக்காம் சான்றுகள்!
நூலும் நூலும் நுவன்றவை யோடு
மேலாய் அமைந்தன முன்பின் அட்டைகள்!
பாலாய் இனித்தன படங்களும் என்பதால்
வாழ்வும் பணியும் வையமுள் ளளவும்
வாழும் என்பது வரலாற் றுண்மையே!
என்பதைக் கூறி என்னுள நன்றியை
மன்பதை போற்றும் தங்கட் களித்தனே!

- தெ முருகசாமி

www.padippakam.com



# முன்பதிவுக்கு முந்துங்கள்!

| பெரியாரியல் - தொகுதி 1<br>பெரியாரியல் - தொகுதி 2 | ஆசிரியர்<br>வே. ஆனைமுத்து |
|---|---|

**அரிய, புதிய விவரங்களுடன்**

**இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது**

**இரண்டு தொகுதிகளும்**

விற்பனை விலை உரு. 200/-

முன்பதிவு விலை உரு. 125/-

முன்பதிவுக்குக் கடைசி நாள் 26-04-2006

நூல் வெளியீட்டு நாள் 06-05-2006

## தமிழீழத் தமிழரை, இலங்கை மலையகத் தமிழரை நீங்களும் பாருங்கள், நீங்களும் பேசுங்கள்

ஆசிரியர் : **வே. ஆனைமுத்து**

**கூடுதல் விவரங்களுடன்**

**இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது**

விற்பனை விலை உரு. 140/-

முன்பதிவு விலை உரு. 80/-

முன்பதிவுக்குக் கடைசி நாள் 26-04-2006

நூல் வெளியீட்டு நாள் 06-05-2006

மடல், பணம் / வங்கி முறி விடுத்திட முகவரி :

**வே. ஆனைமுத்து (V. ANAIMUTHU)**

19, முருகப்பா தெரு (மாடி)

சேப்பாக்கம், சென்னை - 605 005.

தொலைபேசி : 2852 2862 கைபேசி : 9444 804980

www.padippakam.com



# மனங்குளிரக் கோலோச்சும் அரங்கசாமி

காவலர் **பெ. ஆறுமுகம்**, தியாகதுருகம்.

மாறாத கொள்கையாய் மாநிலம் தன்னிலே
மனம்குளிரக் கோலோச்சும் அரங்கசாமி!
கூறாதோ தமிழ்க்குரல் எங்குமே நின்புகழ்!
குறையேதும் காண்ப துண்டோ!
தாராளக் குணம்கொண்டு தந்திடும் நல்லாட்சி
தரணியே புகழ்பாடு திங்கே!
ஏராளத் திட்டங்கள் ஏழையின் வாழ்விலே
ஏற்றமே காணச் செய்தாய்!

# மியன்மாவில் தமிழர் அறநெறிக் கழகம் சார்பில் குழந்தைகள் விழா

4-1-2006 இல் மியன்மாவில் காந்தியார் நினைவரங்கில் தலைவர் கோ. கலைச்செல்வன் அவர்கள் தலைமையில் குழந்தைகள் விழா நடந்தது. பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டனர். திருக்குறள் மனனப் போட்டி, திருக்குறள் பாடத் தேர்வு, பாடற்போட்டி, இயற்போட்டி ஆகியவை நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் அனைவருக்கும் இனிப்பும் குளிர்குடிகையும் வழங்கப்பட்டன. விழா சிறப்பாக நடந்தது அனைவருக்கும் மகிழ்ச்சியளித்தது.

# விழுப்புரத்தில் முத்தமிழ் விழாவாக நடந்த தமிழ்த் திருமணம்

23-1-2006 இல் விழுப்புரம் ஆறுமுகம் திருமண மண்டபத்தில் புலவர் கு. சம்பந்தனார் விருத்தாம்பிகை இணையரின் மகன் செல்வன் ச. பிரகாசம் - சுபாசினி ஆகியோர் திருமணம் முத்தமிழ் விழாவாக நடைபெற்றது. முனைவர் க. பொன்முடி மண நிகழ்வினை நடத்தினார். திரு. பன்னீர் செல்வம், முனைவர் மா. சற்குணம் வாழ்த்துரை வழங்கினர். அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்க மாவட்டத் தலைவர் புலவர் ச. தமிழரசு தலைமையில் வள்ளுவம் பேசுகிறது என்ற தலைப்பில் அறு பெருந்தமிழறிஞர்கள் கவிதை பாடினர். பாசறைப் பாவலர் தி. பழநிச்சாமி அறிமுகக் கவிமலர் வழங்கினார். மெல்லிசையும் நடனமும் நாடகமும் வினாடி வினா நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன. எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் கவிமாமணி சி. விக்கிரமன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

www.padippakam.com



# கருத்தரங்கம்

1) 'தொலைக்காட்சி'யில் காட்சி மட்டுமே அந்தக் கருவியைக் குறிக்காது. அதுபோல் பேசி மட்டுமே அந்தக் கருவியைக் குறிக்காது 'தொலைபேசி' என்பதுதான் அந்தக் கருவியைக் குறிக்கும். 'பேசி' என்ற சொல்லாக்கம் 'பேசு' என்ற வினைப்பகுதியைக் கொண்டு அமைந்திருப் பதால் அதைத் தொழிற்பெயராகக் கொள்ளலாம். எனவே தொலைபேசி என இயல்பாக ஒலிப்பதுபோல எழுதலாம்.

'செல்போன்' தொலைபேசியின் ஒரு வகையானதால் அதைக் 'கைத்தொலைபேசி' என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

2) கொடுத்தபடி 244 பாவலர்கள் பாக்களைத் தொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. இந்தப் பகுதிக்காக 14 பக்கங்களை - இதழில் 40% ஒதுக்கியிருப்பது எந்த இதழும் செய்யாத அருஞ்செயலாகும். பாவலர்களில் 68 பேர் (28%) பெண்கள் என்பதும், 67 பேர் (27%) சிற்றூர்களில் வாழ்பவர்கள் என்பதும் நற்றமிழின் வெற்றிக்குச் சான்று பகர்வனவாகும். 31 பேர் (12%) புதுவையைச் சேர்ந்தவர்கள். ஒருவரே இரண்டு பாக்களை எழுதியனுப்புவதைத் தவிர்க்க வேண்டும். 244 பாவலர்கள் பாக்களை எழுத வாய்பபளித்து, அவர்களை இத்துறையில் வளர்த்துவரும் நற்றமிழுக்கு நன்றி! பங்கு கொண்ட பாவலர்க்குப் பாராட்டுகள்!

10, 24, 173, 224 ஆகிய நான்கு பாக்களும் மிகச் சிறப்பாயுள்ளன. அவற்றை இயற்றிய பாவலர்க்குச் சிறப்பான பாராட்டுகள்!

**- மாசில்மகிழ்நன், திருப்பத்தூர்.**

(குறிப்பு : காட்சி என்பது காட்சியைக் காட்டும் கருவியைக் குறிப்பதும் தமிழ் மரபே. தொலைப்பேசி, கைப்பேசி, செல்பேசி (செல்லுதல் பேசி) என இப்பொழுது தமிழில் பயன்படுத்துகின்றனர். இத்தொடர்களில் பேசி என்பது கருவியையே குறிக்கிறது. தொலைபேசி என எழுதினால் தொலைதல் பேசி என ஆகித் தொலைந்த பேசி, தொலைகின்ற பேசி, தொலையும் பேசி என முக்காலத்தைக் குறிக்கும் வினைத் தொகைப் பொருளில் அத்தொடர் வேறு பொருளைத் தருவதாகும். தொலைவில் இருப்பாரிடம் பேசும் கருவி எனப்படும் பொருளில் தொலைப்பேசி என வலிமிகுத்து எழுதுதலே சீரியதாகும்.

**- இறைவிழியன்.)**

"நற்றமிழ்" 15-2-06 இதழின் மேலட்டையில் ஓரிடத்திலும் 35 ஆம் பக்கத்தில் ஈரிடங்களிலும் போர்த்தி என்னும் பிழையான சொல் அச்சடிக்கப்பட்டுள்ளது.

போர்த்து என்பது பகுதியெனத் தவறாகக் கருதுவதால் நேரும் இப்பிழை ஏடுகளிலும் நூல்களிலு அடிக்கடி இடம் பெறுகிறது.

போர் என்பதே பகுதி காட்டு : போர்+வை = போர்வை.

இப்பகுதியிலிருந்து போர்த்த, போர்த்து, போர்த்தார் முதலான சொற்கள் பிறக்கும்.

www.padippakam.com



நோக்குக :

"புண்ணிய நறுமல ராடை போர்த்து - சிலப். 13:172

"புலியின்தோல் போர்த்து" - குறள் 273

- சொ. ஞானசம்பந்தன், மறைமலைநகர்.

பன்மொழிப் புலவர் சொ. ஞானசம்பந்தனார் அரிய இலக்கணச் செய்தியை எடுத்துக்காட்டியுள்ளார். அவர்க்கு நன்றி கூறுகிறோம்.

போர் - முதனிலை
போர்த்தல் - போர்+த்+தல் - தொழிற்பெயர்
போர்த்து - வினையெச்சம்
போர்த்த - பெயரெச்சம்
போர்த்தான் - போர் + த் + த் + ஆன் - வினைமுற்று
இவை தன்வினையாக அமைந்தவை.

போர்த்து - முதனிலை
போர்த்தல் - போர்த்து + அல் - தொழிற்பெயர்
போர்த்துதல் - போர்த்து + தல் - தொழிற்பெயர்
போர்த்தி - வினையெச்சம்
போர்த்திய - பெயரெச்சம்
போர்த்தினான் - போர்த்து + இன் + ஆன் - வினைமுற்று
இவை பிறவினையாக அமைந்தவை.

எனவே, போர்த்தி என்பது பிறவினை வினையெச்சமாக அமைந்த முறையான வடிவமென்றே கருதுகிறோம். - இறைவிழியன்.

1) தொலைபேசி தொலைகாட்சி என்பதை வினைத்தொகை என்றும், ஒற்று இட்டுஎழுதி அவைகளை 5ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்றும் கூறி இவைகள் இலக்கணப்படி சரி என்று கூறுகிறார் புலவர். காலம் கரந்த பெயரெச்சம் வினைத் தொகை அப்படி ஆனால் தொலைந்தகாட்சி, தொலைகின்றகாட்சி, தொலையுங்காட்சி, என்று பொருள் கொள்கிறார் போலும். அவைகள் வினைத் தொகைகள் அல்ல.

தொலைவின்கண் உள்ள காட்சி எனப்பொருள் கொண்டால் 7ஆம் வேற்றுமைத்தொகை தொலைவின்கண் உள்ள காட்சியைக்காணற்கு ஏதுவான கருவி என்று பொருள் கொண்டால் 7ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை 5ஆம் வேற்றுமைக்கு 'இல்' உருபு உண்டேனும் அது இடப்பொருளைத்தராது. அதற்கான பொருள் நீங்கல், ஒப்பு, எல்லை ஏதுப்பொருளே. எனவே ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனக் கூறல் பொருந்தாது.

தொலைபேசியா? தொலைப்பேசியா? எது சரி. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் என்ற பொது விதியால் தொலைப்பேசி என்பதே ஒலிநயம் பொருந்தும் இல்லையேல் வாழைபழம் கீரைகறி என்பது போல் ஆகிவிடும்.

2) புலவர் மாசில்மகிழ்நன் உறாது என்பதை வினை எச்ச மாக்கியும் வினை முற்றாக்கியும் உறுப்பிலக்கணம் கூறினமை சரியே. ஆனால் அறியாதவன் என்பதை அறி+ய்+ஆ+த்+அன் எனப் பிரித்துள்ளார் அது புணருங்கால் அறியாதன் என்றுதானே புணரும் வகர உயிர் மெய் என்னவாயிற்று என்று தெரியவில்லை. - புலவர் வெ. மாசிலாமணி

படிப்பகம்

www.padippakam.com



# பொங்கலோ பொங்கல்!

தங்க இணையர் மங்கல வாழ்விற்
பொங்குக பொங்கல்! பொங்குக இன்பம்!
வீட்டு நலத்துடன் நாட்டு நலமே
ஈட்டு நலன்கள் யாவினும் மேலெனக்
காட்ட எடுத்துக் காட்டாய் விளங்குங்
கூட்டுக் குடும்பப் பாட்டு வாழ்க்கையே
மான ஒழுக்கம் போற்றி வாழ்ந்தால்
வானகம் நமக்கு வயப்படும் என்றே
அங்கை நெல்லிக் கனியெனக் காட்டத்
தங்க மலர்களாய்த் தமிழ்மணங் கண்டீர்!
மதன பாண்டிய வழிமுறை கிளத்தும்
புதின மாகப் புவியிடைப் போந்து
நல்லற மென்று நற்றமிழ் கண்ட
இல்லற வாழ்க்கை இன்றுணை நலத்தீர்!
மக்கட் பேற்றின் மாண்புகள் கண்டும்
சிக்கலின் இடையே செம்மை காத்தும்
வள்ளுவர் சொன்ன வாழ்வாங்கு வாழ்தல்
தெள்ளிதின் உணர்ந்த தென்மொழிக் குலத்தீர்!
செங்கதிர்ச் செல்வன் செங்கோல் பாவத்
திங்களஞ் செல்வன் வெண்குடை நிழற்ற
விண்மீன் குழவிகள் விளக்கம் ஏந்தக்
கண்ணகல் ஞாலங் களிப்பிற் சுழல
மின்னல் உருமுடன் நன்னர் நடஞ்செயக்
குதலை மொழியார் பதநீர் வார்க்க
நறுநீர் தெளிப்பின் இனிதெனப் பெயரா
சிறுநீர் தெளிப்பின் இன்பந் தேரப்
பொங்குக பொங்கல்! பொங்கலோ பொங்கல்!
பொங்கல் இடுக பொங்கல்!
எங்குந் தமிழின் இசையொலித் திடவே!

**- கலைமாமணி பாவல்ரேறு செவ்வேள்**

(குறிப்பு : பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா அவர்கள் வழக்கம் போல் எனக்கனுப்பிய பொங்கல் வாழ்த்துக்கு விடையாக அனுப்பப்பட்ட பாடல். - செவ்வேள்)

www.padippakam.com



## நன்னன் அண்ணல் நினைவுப் பரிசுப் போட்டி
## தி.பி. 2037 சிறுகதை போட்டி முடிவுகள் அறிவிப்பு

இப்போட்டியின் தி.பி. 2036க்குரிய பரிசளிப்பு விழா கி.பி 30.7.2006 இல் சென்னையில் நடைபெற்ற போது செய்த அறிவிப்புக் கிணங்க கி.பி. 2005 இல் சூலைக்குள் பதிவு செய்து கொண்டோர் அக்டோபருக்குள் தத்தம் சிறுகதைகளை அனுப்பினர். அவற்றை நன்னன், வேண்மாள், அவ்வை ஆகிய நன்னன் குடி உறுப்பினர்கள் அகமதிப்பீடு செய்து தேர்ந்தெடுத்த சிறுகதைகளை 'திரு. விடுதலை இராசேந்திரன், திரு. வீரபாண்டியன் (கதிர் தொலைக்காட்சி), முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியம்' ஆகிய மூவரும் புற மதிப்பீடு செய்தனர். இவ்விரு மதிப்பீடுகளுக்கு மிணங்க பின்வரும் முடிவு அறிவிக்கப்படுகிறது.

1. சென்னை செல்வி. ஏசு. பர்வீன் பானு எழுதிய 'இராகு காலம்' என்னும் சிறுகதை முதல் பரிசாக பத்தாயிரம் உருவா (ரூ. 10,000) பெறும்.
2. கரூர் திரு. கருவை குழந்தை எழுதிய 'இராகு காலம்' என்னும் சிறுகதை இரண்டாம் பரிசாக ஆராயிரம் உருவா (ரூ. 6,000) பெறும்.
3. காரைக்குடி திரு. அய்க்கண் எழுதிய 'நாளும் கோளும் நல்ல நல்ல...' என்னும் சிறுகதை மூன்றாம் பரிசாக நாலாயிரம் உருவா (ரூ. 4,000) பெறும்.

கி.பி. 30.7.2006 இல் சென்னையில் நடைபெறும் விழாவில் இப்பரிசுகள் வழங்கப்படும்.

சென்னை
20-2-2006

மா. நன்னன்

## நன்னன் அண்ணல் நினைவுப் பரிசுப் போட்டி
## தி.பி. 2037 பா போட்டி முடிவுகள் அறிவிப்பு

இப்போட்டியின் தி.பி. 2036க்குரிய பரிசளிப்பு விழா கி.பி 30.7.2006 இல் சென்னையில் நடைபெற்ற போது செய்த அறிவிப்புக் கிணங்க கி.பி. 2005 இல் சூலைக்குள் பதிவு செய்து கொண்டோர் நவம்பருக்குள் தத்தம் பாக்களை அனுப்பினர். அவற்றை நன்னன், வேண்மாள், அவ்வை ஆகிய நன்னன் குடி உறுப்பினர்கள் அகமதிப்பீடு செய்து தேர்ந்தெடுத்த பாக்களை 'திரு. ஈரோடு தமிழன்பன் (ந. செகதீசன்)' புலவர் இறைக்குருவனார், பாவலர் இலம. தமிழ்நாவன் ஆகிய மூவரும் புற மதிப்பீடு செய்தனர். இவ்விரு மதிப்பீடுகளுக்கு மிணங்க பின்வரும் முடிவு அறிவிக்கப்படுகிறது.

1. பழனி திரு. பழனி எழில் மாறன் எழுதிய 'கலைஞரின் கவிதை மழையில் நனைந்தேன்' என்னும் பா முதல் பரிசாக பத்தாயிரம் உருவா (ரூ. 10,000) பெறும்.
2. கரூர் திரு. பழ. இராமசாமி எழுதிய 'கலைஞரின் கவிதை மழையில் நனைந்தேன்' என்னும் பா இரண்டாம் பரிசகாக ஆறாயிரம் உருவா (ரூ. 6,000) பெறும்.
3. திண்டுக்கல் திரு. அகத்தியன் எழுதிய 'கலைஞரின் கவிதை மழையில் நனைந்தேன்' என்னும் பா மூன்றாம் பரிசாக நாலாயிரம் உருவா (ரூ. 40,000) பெறும்.

கி.பி. 30.7.2006 இல் சென்னையில் நடைபெறும் விழாவில் இப்பரிசுகள் வழங்கப்படும்.

சென்னை
20-2-2006

மா. நன்னன்

www.padippakam.com



## புதுச்சேரி அரசின் "தமிழ்மாமணி" விருதினைப் பெற்ற நற்றமிழ் ஆசிரியர் புலவர் மு. இறைவிழியனார்க்குப் பாராட்டு

கற்பனை கற்று அதன்படி நிற்பவர்
பொற்புடை நல்லவர் இறைவிழியர் அன்ன
கற்றதைக் கற்போர்க்குக் கற்பித்துச் சான்றோரை
உற்பத்திச் செய்வது நன்று

நன்றிதை நன்கு இயற்றிய நல்லாசான்
அன்பர் இறைவிழியன் என்போம் அவர்தம்
பொறையடக்கம் ஆள்வினை ஆன்ற தமிழுந்
நிறைமனிதர் என்றே பகரும்.

பகர்வார் அவரை அறிந்த எவரும்
நிகரற்ற நேர்மை நிறைவுற்ற வாழ்வு
அகரம் அனைய சிறப்பு செலுவாக்[கு]
அகநகக்கும் நட்பு எலாம்.

எல்லாச்சிறப்பும் மிகுநல் புலவர்க்கு
நல்லதோர் சான்றாம் தமிழ்மா மணிவிருது
நல்கிப் புதுவை அரசதுவும் நற்பெருமை
கொள்ளாது கொண்டது; வாழ்த்து!

வாழ்த்தி வரவேற்றுச் செய்வோம் நமதன்பர்
ஆழ்புலமை நல்லார் இறைவிழியர் பெற்ற
பெரும்பேறைப் போற்றிப் புகழ்பாடி ஆடிச்
சிறப்பிப்போம் சீராக நாம்!

- குன்றம் மு. இராமரத்நம்.

ஈடிலா இறைவிழியர் தமிழ்மொழியை
நாடுவார்; வளமுடன் பண்புடையார்
கூடுவார்; சிறப்புடன் திகழுதற்கே
பாடுவார் புகழினால் நற்றமிழால்!

- கவிஞர் பெ. அறிவழகன், சின்னசேலம்.

## தமிழ் அரண் பாவாணர் மன்றம்

சிற்றூர் புறச் சிறார்களை நாடித் தமிழ் அரண் பாவாணர் மன்றம் மாத்தூரில் நிறுவப்பட்டு வருகின்றது. கட்டடப்பணிகள் முழுவீச்சில்! மீனத்தில் திறப்பு! சிற்றூர்ப் புறச்சிறார்களின் உள்ளத்தில் தமிழியத்தை விதைக்க விழைந்த எளியேனின் செயற்பாடு! வாழ்த்த வேண்டுகிறேன்.

பொறிஞர் அகன்
தமிழ் அரண் பாவாணர் மன்றம்
தொல்காப்பியர் தெரு, தங்கையா நகர்,
மாத்தூர் - 622 515.

(அகனாரின் பணி பயனுற நடந்திட நற்றமிழ் வாழ்த்துகிறது - ஆசிரியர்)

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-12 மா+மா+ தேமாங்காய்

பரவுந் தமிழைப் பாங்காக
மரபு வழியில் பாடத்தான்
திருவுங் கலையுஞ் சேர்ந்தாற்போல்
தெரிய யாப்புச் சொல்வேனே!

1.- **கவிஞர்தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.**

இல்லார் தம்மை எள்ளாதே
கல்லார் உறவு கொள்ளாதே
நல்லார் நட்பு தள்ளாதே!
பொல்லார் பக்கஞ் செல்லாதே!

2. **- கவிஞர்கி. பாரதிதாசன், பிரான்சு.**

விதியின் வழியே வாழ்வென்றால்
மதிதான் எதற்கு; மாமன்றில்
சதியை விதியை யேற்கின்ற
மதமே கொண்டோர் மாயட்டும்.

3. **- கவிஞர் இல. வேமன்னன், பொம்பூர்.**

மண்ணில் பெருமை காண்போமே
பண்ணில் இசையைக் கொள்வோமே
கண்ணில் இமையாய்க் காப்போமே
விண்ணில் புகழைச் சேர்ப்போமே

4. **- ஆறு. தமிழ்நிதி வேந்தன், புதுச்சேரி.**

பொல்லா வினைகள் செய்யாதே!
வல்லார் நட்பைக் கொல்லாதே!
பல்லார் முனியப் பேசாதே!
நல்லார் வருத்தி வாழாதே!

5. **- வில்லவன்.ப. முத்தமிழ்வாணன், புதுச்சேரி.**

நேர்மை உண்மை போற்றுங்கள்!
சீர்மை பெருக்கி வாழுங்கள்!
கார்மே கம்போல் எல்லார்க்கும்
பாரோர் ஏத்த ஈயுங்கள்!

6. **- புதுவை ப. அங்கயற்கண்ணி, புதுச்சேரி.**

பிறந்த தமிழ்மண் என்(று) எண்ணின்
சிறந்த மனிதர் ஆவோமே!
இறந்த காலம் வாராதே!
திறந்த மனத்தால் வாழ்வோமே!

7. **- புலவர். வேங்கடராசன், திருவரங்கம்.**

கற்றோர் தம்மைப் போற்றுங்கள்
பெற்றோர் தம்மைப் பேணுங்கள்
மற்றோர் வாழ்வை நாடுங்கள்
உற்றோர்க் குண்மை கூறுங்கள்

8. **- புலவர். த. தட்சணாமூர்த்தி, தி.ரா.பட்டினம்.**

பேச்சும் எழுத்தும் தேமாவாய்
மூச்சும் முழக்கும் விண்முகிலாய்
வீச்சும் விளைவும் நெற்கட்டாய்
ஓச்சித் தமிழர் வெல்வோமே!

9. **- ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.**

உய்ய வழியும் காணாமல்
பெய்த நீரை விட்டார்கள்
செய்த தவற்றால் ஆள்வோர்கள்
எய்தும் துயரைக் காண்பீர்கள்!

10. **- புலவர் அ. பக்கிரிசாமி, திருநள்ளாறு.**

கல்லா னென்றால் காணாதே
பொல்லா னென்றால் போகாதே
இல்லா னென்றால் ஏசாதே
நல்லார் முன்சொல் வீசாதே!

11. **- வ.சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.**

சோலை நிறைந்த எண்ணத்தில்
காலை எழுந்து கற்றிட்டால்
காலம் முழுதும் காப்பாற்றும்
ஞாலம் நம்மை வாழ்த்தாதோ?

12. **- ச.சி. சந்தானம், ஆலக்கிராமம்.**

நல்லார் நாளும் வாழ்வாரே
பொல்லார் என்றும் வீழ்வாரே
வல்லார் வாழ்வு கொண்டாட்டம்
எல்லா வளமும் காண்பாரே.

13. **- அப்பரடிப்பொடி ச. திருநாவுக்கரசு, முசிரி.**

இன்புத் தமிழே என்னுள்ளத்
தென்றும் சுரக்கும் தேனூற்றே!
நின்று நிலைத்துக் கேடெல்லாம்
வென்றே என்றும் நீவாழ்வாய்!

14. **- பொறிஞர் அகன், மாத்தூர்.**

எண்ணான் எழுதான் தாழ்வானே
மண்ணில் பிறந்தே நற்பண்பால்
உன்னி உணரும் நாட்டோனே
என்றும் உலகில் மேலாவான்!

15. **- கவிஞர் பெ. அறிவழகன், சின்னசேலம்.**

நெய்யில் இட்ட பண்டத்தைக்
கையால் கூடத் தீண்டாதீர்!
வையம் விட்டு விண்ணெய்தப்
பெய்யும் நஞ்சே நெய்ப்பண்டம்.

16. **- மு. இராம. கனகராசன், புதுச்சேரி.**

www.padippakam.com



மண்ணில் நன்மை உண்டாக
உண்மை தன்னை வாய்வைத்து
வெண்மை உள்ளம் கொண்டாலே
எண்ண மெல்லாம் ஈடேறும்.

17. - இரா. அருணாசலம், ஆனந்தா நகர்.

கல்லார் நில்லார் வெல்வாரே
சொல்வார் செய்வார் தோற்பாரே
நல்லார் வாழ்வில் வென்றால்தான்
எல்லா நலமும் பாரெய்தும்!

18. - பாவலர் தேவமைந்தன், புதுவை.

தொண்டன் சிறியன் என்றாலும்
பண்டைப் பெருமை ஓர்ந்தோனே
அண்டை அயலார் ஆர்த்தாலும்
தொண்டை மறவாத் தூயோனாம்!

19. - நா. தண்டபாணி, அம்பல்.

மண்ணின் மாசை மாற்றிட்டுக்
கண்ணாய்க் காப்போம் பண்பாட்டை!
பண்பின் பயனை மேற்கொண்டு
மண்ணில் நலமாய் வாழ்வோமே!

20. - வீ. சிவபெருமான், விருத்தாசலம்.

மண்மேல் பற்றும் இல்லாது
பெண்மேல் மோகம் கொள்ளாமல்
உண்மை என்றும் பேசிட்டால்
திண்மை வாழ்வில் உண்டாகும்.

21.- செல்வி த. சாந்தினிபாய், சி.பா.சு. தமிழ்க்கல்லூரி

காற்றில் வருமாம் பாடல்கள்!
சேற்றில் மலரும் செங்காந்தள்!
ஆற்றில் பெருகும் நீரைப்போல்
மாற்றம் வேண்டும் உள்ளத்தில்!

22. - வே. மாயகிருட்டிணன், எடப்பாளையம்.

தேர்தல் வந்தால் நாட்டுக்குள்
போர்வாள் ஏந்திப் போவாரே!
ஊர்தான் மோதப் பார்ப்போமே
யார்தான் நன்மை செய்வாரோ?

23.- நடேசர் நித்தியானந்தம், திருக்கழுக்குன்றம்.

வண்ண மலரில் தேன்கண்டும்
உண்ண மறுக்கும் வண்டுண்டோ?
பண்ணார் தமிழை நெஞ்சார
எண்ணி மகிழார் இங்குள்ளார்!

24. - புலவர் மா.சு. மணி, திருக்கழுக்குன்றம்.

கற்கும் பிஞ்சாய்ச் செந்தீயில்
சொற்பம் போல மாய்ந்தோர்க்குப்
பொற்புக் கண்ணீர் சிந்தும்நாள்
சொற்கள் கொண்டு பாடுங்கள்.

25. - சு. எழிலரசன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

ஈழத் தமிழர் நின்றிட்டார்
வாழத் தனித்த நாடென்றார்
வேழம் போன்று நோக்கோடு
நாழி தோறும் வென்றிட்டார்

26. - இசைவாணர் எ. சிவாநந்தம், பாகூர்.

நாக்குச் சொற்கள் தேனாக்கி
வாக்கைக் கேட்டுக் கால்வீழ்வார்
ஏக்கம் தீர்ப்போர் யாரென்றே
நோக்கி யளித்தால் வாழ்வோமே!

27. - பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

திருஆர் தமிழின் சீரெல்லாம்
கருதார்; கரவுச் சொற்பேசி
வருவார்; கேட்பார் ஒப்போலை
ஒருகால் உறவால்; தாராதீர்.

28. - வில்லியன், புதுவை.

நாட்டுப் புறத்தைக் காத்திங்கே
காட்டின் வளத்தை மீட்போமே!
நாட்டின் நலத்தை நாம்கண்டு
வாட்ட மின்றி வாழ்வோமே!

29.- 'சங்கமம்' கணேசன், அ.ம.பல்கலைக்கழகம்.

நன்றாய்க் கல்வி நாம்கற்றால்
குன்றா வெற்றி பெற்றேநல்
மன்றும் வாழ்வு மண்ணில்நாம்
என்றும் பெற்று வாழ்வோமே!

30. - மு. அருணகிரி, பாகூர்

கடவுள் வந்து கண்ணாலே
திடமும் பலமும் தந்தானே
தடமும் மாறாப் பண்பாலே
மடத்தில் தங்கிச் சாதிப்பேன்"

31. - க. உமாமகேசுவரி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

"துன்பம் சிறிதும் இல்லாமல்
இன்பம் என்றும் கொண்டாயே
உண்மை மட்டும் சொல்வாயே
எண்ணம் சொல்லும் நல்லண்ணே!

32. - மு. அம்புசம், பெரம்பூர்

நெஞ்சம் கசிந்து நின்னையே
எஞ்சா துள்ளத் தில்வைத்தேன்
தஞ்சம் புகுந்தேன் அன்னையே
அஞ்சல் இலதே என்வாழ்வில்

33. - கு. அம்மச்சி, காலூர்.

இம்மை வாழ்வில் எல்லாரும்
செம்மை யுறஅன் பைக்கொண்டே
அம்மன் அடியில் தாழ்ந்தென்றும்
இம்மண் ணுலகில் வாழ்வோம்யாம்.

34. - ஆ. இந்திரா, சி.பா.சு. தமிழ்க்கல்லூரி.

www.padippakam.com



வெல்லும் சொல்லைப் பேச்சாக்கிச்
சொல்லும் செயலும் மூச்சாக்கி
நல்லார் எனும்பேர் வீச்சாக்கிப்
பொல்லாங் கின்றி வாழ்வாயே!
35. - புலவர். ந. ஞானசேகரன், திருலோக்கி.

அலைவு கொள்ளா நல்லாசான்
பலரும் போற்றும் பாவாணர்
குலவு தமிழை ஆய்வாரே
புலவர் நடரா சர்வல்லார்
36. - நா. பொன்னுசாமி, புதுவை.

அமிழ்தாய்த் தமிழை யெண்ணாதார்!
அமைவாம் வாழ்வை நண்ணாதார்!
கமழாப் பூவைக் கொய்தாரே!
சுமையாய் நஞ்சைப் பெய்தாரே!
37. - வானவன், வெங்காலூர்.

கண்ணால் கண்ட எல்லாமும்
உண்மை என்றே ஆகாவே
வெண்மை எல்லாம் பால்ஆமா?
உண்மைப் பொருளை ஆராய்வாய்!
38. - அ. கனகசபாபதி, தென்கீரனூர்.

எண்ணி உணர்ந்து நெஞ்சுள்ளே
பின்னிப் பிணைந்து பன்னாளும்
உன்னி முயன்றும் உள்மூச்சாய்
நண்ணி நயக்கும் நன்னாடே.
39. - மணிமொழியார், பொள்ளாச்சி.

பொன்றாத் தமிழைப் போற்றாரை
நன்றாம் குறளை நாடாரை
வென்றே தீமை வீழ்த்தாரை
இன்றே தள்ளல் ஏற்பாமே!
40. - ப. தாமரைக்கனி, கோவை.

கருவில் இருந்த என்னைநீ
பெருவே தனையில் பெற்றாயே
பெரியோர் மதிக்கச் செய்திட்டாய்
குருஎன் றுனைநான் போற்றிட்டேன்.
41. - கு. முதற்பாவலர், ஏப்பாக்கம்.

படிப்பில் பண்பைப் பெற்றிட்டால்
துடிப்பாய் எதையும் செய்வாய்நீ
குடிக்கும் பழக்கம் நின்றிட்டால்
மடியும் உயிர்கள் எண்குன்றும்.
42. - அ. பாலாசி, திருவண்ணாமலை.

இயற்கை வாழ்வில் எப்போதும்
செயற்கைக் கலப்பு வேண்டாமே!
செயலை என்றும் செய்தாலே
பயனும் வருமே எப்போதும்!
43. - மு. மேகலா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

என்னில் உள்ள நம்பிக்கை
உன்னில் உள்ள அன்பும்தான்
இன்ப வாழ்வின் ஆரம்பம்
நன்றாம் நம்மில் எப்போதும்.
44. - ச. சங்கர் கணேசு, பெரப்பேரி.

எண்ணும் எண்ணம் ஏற்றத்தால்
மண்ணின் வாழ்வை மாண்பாக்கிக்
கண்ணின் மேலாய்க் காத்தோர்க்குப்
பண்ணும் வையம் பாங்கெல்லாம்.
45. - புலவர் கோ. தனபாலன், வில்லியனூர்.

எல்லாம் தமிழே என்றேதான்
நல்லோர் செய்யும் நாள்வந்தால்
பொல்லாத் தாழ்வு போகாவோ?
இல்லா நன்மை எய்தாவோ?
46. - இரா, பழனிசாமி, கோவை.

செல்வன் என்றே சொன்னால்என்?
இல்லான் என்றே சொன்னால்என்?
நல்லான் என்றே சொன்னால்தான்?
எல்லோர் நெஞ்சில் நிற்பானே!
47. - வே.இரா. சிவஞான வள்ளல், வேலூர்.

அன்பு கொண்ட தாய்தானே
நன்றி பாராப் பண்புள்ளாள்
என்றும் அவளைக் காத்தற்கே
கன்றாய் விரைந்து செல்வாய்நீ!
48. - ப. விசயகுமார், தி.கொ.அ.க.கல்லூரி.

கருவாய் அறைக்குள் தங்கிப்பின்
உருவாய் உடலும் பெற்றிட்டால்
மருவாய் வளர்ச்சி உற்றிங்கே
வருவாய் உலகில் வாழ்தற்கே!
49. - பா. விசயராசு, தி.கொ.அ.க.கல்லூரி.

தாழும் பகையால் நோய்கண்டு
வீழும் மனமே கீழாகும்!
சூழும் உறவால் தாய்அன்பு
வாழும் மனிதம் மேலாகும்!
50. - கருவை. மு. குழந்தை, கரூர்.

அன்பும் பண்பும் பண்பாடும்
என்றும் கொண்டு இல்வாழ்வை
நன்றாய் நலமாய் மேற்கொண்டால்
துன்பம் துயரம் வாராவே.
51. - கவிஞர் மருத்துவர். பெ. போத்தி, மதுரை.

மண்ணில் தமிழின் ஆக்கத்தை
எண்ணம், சொல்லில் இல்லாமல்
மின்னும் செயலாய்ச் செய்வார்க்கே
பொன்னாய்ப் பொழிவோம் ஒப்போலை!
52.- அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

www.padippakam.com



வாடும் பயிரைக் கண்டால்நான்
வாடிப் போய்உள் ளம்நோவேன்
கேடில் லாஉள் ளத்தால்நாம்
நாடி நன்மை செய்தாலென்?
53. - அ. சதீசு, தென்களவாய்.

சொல்லும் செயலும் ஒன்றானால்
எல்லா நலமும் வந்தெய்தும்!
செல்லும் வழியே நன்றானால்
பொல்லாத் தீங்கும் நைந்தேகும்!
54.- பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

கன்னித் தமிழைக் கற்பீரே
கண்ணாய் அதனைக் காப்பீரே
மண்ணின் நலத்தைக் காண்பீரே
பண்ணாய்ப் பாட்டாய் ஆவீரே!
55. - எழிலன், சென்னை.

கோடிப் பணத்தைச் சேர்த்தாலும்
வாடும் வறிய ஏழைக்கு
நாடி யுதவி செய்யாயேல்
கேடுற் றழிந்து பாழாமே!
56. - அதலை இராமன், மதுரை.

வள்ளல் மனத்தைக் கொண்டாரோ
உள்ளி வறுமை வாட்டத்தை
அள்ளி வழங்கி இல்லார்க்கே
நல்ல உதவி செய்வாரே!
57.- கவிஞர் மருத்துவர் இராகவனார், அதலை.

வேண்டும் கலையே, பண்பாட்டைத்
தீண்டும் அரவாய் ஆகாதே!
வேண்டும் மொழிகள் பாலன்பே
யாண்டும் தமிழ்க்குக் கேடின்றாம்!
58. - திருவாணன், திண்டுக்கல்.

நேரிற் பார்த்தாற் பாராட்டிச்
சீராய் முகமன் நீராட்டிக்
கூராய் நெஞ்சிற் றீயூட்டி
வேரா யூன்று மிந்நாடே.
59. - சிலம்பூர்க்கிழான், கள்ளக்குறிச்சி.

நாட்டைப் பிடிக்கும் நாற்காலி
வீட்டை அழிக்கும் நம்பாதே
நாட்டை நலமாய் நாம்காக்கப்
பூட்டாய் இருப்போம் வாநண்பா!
60. - மு. சண்முகம், பாதூர்.

முன்னே, நீங்கள் யாரென்றார்;
சொன்னேன் பெயரை; இல்லை,உம்
பின்னே வரைபே ரென்னென்றார்!
என்னே இழிவே! தூ !சாதி!
61. - செழியரெலுவன், விழுப்புரம்.

இன்பம் வந்தால் ஏற்போரோ!
துன்பங் கண்டால் சோர்வேனோ?
பண்பில் ஓங்கப் பார்ப்பீரே!
நண்பில் நல்லார் ஆவீரே!
62. - கோபி, மாமல்லபுரம்.

மண்ணில் இழிந்தோன் வாழ்ந்தாலே
எண்ணில் அடங்காத் துன்பங்கள்!
கண்ணீர் விட்டு வாழ்வாரே
உண்மை கலங்கி நிற்பாரே!
63.- வி. கோபாலகிருட்டிணன், தி.கொ.அ.க.கல்லூரி.

ஓரி னம்தான் எல்லோரும்
ஓரி றைவன் எல்லோர்க்கும்
நேரி தென்றே ஓராரே
சீரி ழுந்து தேய்கின்றார்.
64. - சீ.பெ. முத்துக்குமரன், கோவை.

கள்ளம் இல்லா உள்ளத்தால்
பிள்ளை யாக வாழ்ந்தாய்நீ!
பள்ளம் மேடு காணாத
உள்ளம் தன்னைக் காப்பாய்நீ!
65. - கு. வீரவேல், தி.கொ.அ.க.கல்லூரி.

காலை எழுந்து காண்போமே
சோலை மலரும் தேனோடை!
மாலை மருவும் பொன்வானம்
சேலை உடுத்தும் பெண்ணாமே!
66. - பாவலர் திருவை அரசு, சாமிமலை.

மீன்கள் அலவோ உன்கண்கள்
தேன்தான் உன்றன் சொல்லெல்லாம்
மான்போல் பார்வை கொண்டுள்ளம்
ஏன்தான் என்னைக் கொல்கின்றாய்?
67. - பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

பண்ணான் மிதவான் பாழ்தானே
பண்ணில் தெளிந்தோன், சொல்வித்தால்
உண்ணி உயர்வாய் ஆர்ப்பானே
மன்னும் தகவுற் றூலாவான்!
68. - புலவர். இடிமுரசார், சென்னை.

தேர்தல் தேர்தல் என்றிட்டார்!
தேர்தல் யாருக் கென்றே நாம்
தேர்தல் செய்தால் அந்தோதான்!
தேர்தல் செல்வச் சாதிக்கே!
69. - தே. முருகசாமி, புதுவை.

வான்நீர் என்னும் பொற்கம்பி
தான்பற் றியோர்நாள் வான்நோக்கி
நான்ஊர்ந் தும்பொற் கால்மாட்டில்
ஊன்நீர் வற்றிச் சேரேனோ?
70. - த. கருணைச்சாமி, தேனீ.

www.padippakam.com



உங்கள் அன்பை எந்நாளும்
எங்கள் வாழ்வில் வேட்கின்றோம்!
தங்கள் அன்பால் என்றென்றும்
எங்கள் வாழ்வும் நன்றாகும்!
71. - கு. பிரபு, பரிக்கல்பட்டு.

உண்மை என்னும் ஒன்றாலே
மண்ணில் வளமாய் வாழ்வாரே!
துன்ப மெல்லாம் தீர்வாமே!
இன்பம் நாளும் சூழ்வாமே!
72. - சு. அனுபிரியா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

ஆடிப் பாடி வந்தேனே
நாடி நீதான் என்றேனே
தேடித் தேடித் தேய்ந்தேனே
தாடி வைத்து நொந்தேனே.
73. - அ. சோலைத்தென்றல், தென்நெற்குணம்.

மண்மேல் வியர்வை நீவிட்டால்
கண்முன் வளமாய் நீவாழ்வாய்
மண்ணில் பசிநோய் நீதீர்ப்பாய்
விண்ணை அடையும் உன்சீர்மை.
74. - பெ. குமரவேலு ஆசிரியர், செஞ்சி.

வீட்டில் மறையும் இன்பங்கள்
கூட்ட வளரும் கல்லூரி!
நாட்டில் மலரும் நட்பெல்லாம்
ஈட்ட நிறையும் நல்வாழ்வே!
75. - இரா. முத்தையன், காவனூர்.

கண்கள் ஆடும் ஆட்டத்தால்
பெண்ணும் ஆணும் சேர்ந்தாரோ!
இன்றும் உலகை வாழ்விக்கும்
என்றும் அழியாக் காதல்தான்!
76. - சி. செயமூர்த்தி, சேமங்கலம்.

முருகன் சொன்ன சொல்லால்தான்
பெருகித் தமிழும் ஓங்கிற்றோ!
அருந்திப் பார்த்த பின்னால்தான்
அருமைத் தமிழே! சொல்வாயே!
77. - அ. பாசுகர், வி. பரங்கனி.

என்னைக் கல்லாய்க் கண்டேனே
உன்னைக் காணா நாளில்தான்!
என்னை உனக்கே தந்தேனே
என்றும் உன்னில் வாழ்வேனே!
78. - ந. தியாகராசன், எடப்பாக்கம்.

வில்வித் தைபோல் கூர்மையாய்
கல்வி கற்றால் நண்பாநீ
செல்வம் பெற்று வாழ்க்கையில்
நல்லோர் வாழ்த்த சீர்காண்பாய்!
79. - சு. தென்றலரசன், திருவெண்ணெய்நல்லூர்.

விண்ணின் மழையே நீதானே
மண்ணின் உயிராய் வாழ்கின்றாய்
விண்ணில் விளங்கும் உன்னைப்போல்
மண்ணில் கொடையும் இல்லையே.
80. - சு. தண்டபாணி, ஆசிரியர், செஞ்சி.

என்னை நினைத்தே வாழ்கின்றாய்
என்னை இழைபோல் கொண்டாயே
என்றும் பெருமை சேர்ப்பேன்நான்
என்றும் உனக்குத் தந்தையே!
81. - நா. பிரபாகரன், ஆசிரியர், செஞ்சி.

மலர்கள் கொடியில் பூத்தாலும்
உலர்ந்தால் அவற்றைக் காப்போர்யார்?
மலராய்ப் பெண்ணும் வாழ்ந்தால்நம்
நலமும் வளமும் காணல்தான்.
82. - சா. சாகிதா, தி.கொ.அ.க.கல்லூரி.

பெண்ணைத் தெய்வம் என்றேசொல்
வெண்மைத் தூய்மை என்றேசொல்!
மண்ணைச் சொத்தாம் எனறேசொல்!
பண்பை ஒழுக்கம் என்றேசொல்!
83. - த. திருநாவுக்கரசு, பொன்னாலகரம்.

கோழை யாக வாழாமல்
ஏழை வாழ்வு மேலோங்க
ஊழே வரினும் வெற்றிக்கு
வேழ வலிமை கொள்வோமே!
84. - புலவர் செ. இராமலிங்கம், புதுவை.

வாக்கைத் தேடும் எல்லாரும்
ஆக்கம் மிக்க திட்டத்தைத்
தாக்கல் செய்வார் கூட்டத்தில்
வாக்கைப் போட்டால் ஏமாற்றம்!
85. - அண்ணா. தருமலிங்கம், புதுவை.

நன்றே ஈன்ற பெற்றோர்கள்
என்றும் நன்மை செய்வார்கள்!
இன்மை பலநீ செய்தாலும்
நன்மை என்றே சொல்வார்கள்.
86. - வி. திருமுருகன், ஆண்டிமடம்.

நான்தான் தமிழன் என்றேசொல்
ஈன்றெ டுத்த அன்னைக்கு!
நான்தான் தலைவன் என்றேசொல்
ஆன்று வளர்த்த தந்தைக்கு!
87. - வி. திருமாவளவன், தி.கொ.அ.க.கல்லூரி.

அன்று பார்த்தேன் உன்னைத்தான்
நின்று களித்தேன் நானும்தான்!
என்றும் வாழ்வேன் உன்னோடே
என்றே நீயும் சொல்வாயோ!
88. - வி. திருமலைராசா, அகரம்.

www.padippakam.com



உண்மை இன்றி வாழ்வானே
மண்ணில் இழிந்தோன் காண்பாயே!
எண்ணி வறுமை தீர்ப்பானே
விண்ணும் புகழும் மேலாவான்.
89. - சு. அமுதா, திண்டிவனம்.

கல்வி ஒன்றைக் கற்றாலே
செல்வம் பெற்ற வாழ்வாகும்
நல்லோர் வந்து பாராட்டும்
சொல்லும் கூடச் சொத்தாகும்.
90. - சூலூர் கலைப்பித்தன்.

தேங்காய், பழங்கள், தேன்கீரை
பாங்காய்ப் பசுங்காய் உண்போர்கள்
ஓங்கி யொளிர்வர் நோயின்றி!
ஏங்கி யிளையார் வாழ்நாளில்!
91. - புலவர் மு. குறளகன், கருவூர்.

காவல் நிலையம் கண்டாலும்
கோவில் குளத்தைக் கண்டாலும்
காவி உடையைக் கண்டாலும்
யாவும் தருமே அச்சத்தை!
92. - பு. சித்திரா புகழேந்தி, கரூர்.

எதற்காய்ப் பிறந்தோம் இம்மண்ணில்
பதராய் இருத்தல் வீண்தானே!
உதவும் நல்ல உள்ளத்தைப்
பதமாய்ப் பெற்றே வாழ்வாயே!
93. - க. சண்முக சிதம்பரம், தரகம்பட்டி.

பாடப் பாடப் பாட்டுத்தான்
ஆட ஆட ஆட்டந்தான்
கூடக் கூடக் கூட்டந்தான்
தேடத் தேட இன்பந்தான்!
94. - கவிஞர் வே. பூங்குழலி பெருமாள்,திரு.வி.க. நகர்.

இரவில் ஒன்றாய் இன்புற்றோம்
கரங்கள் ஒன்றாய்ச் சேர்த்தோம் நாம்
பிரிவுத் துயர்மட் டும்நீங்கின்
வரங்கள் வேண்டாம் நட்பிற்கு
95. - சு. அருண் பிரசாத்து, திரு.கொ.அ.க.கல்லூரி.

பட்டம் நீங்கள் பெற்றாலும்
சட்டக் கல்வி கற்றாலும்
திட்டம் தீட்டிச் செய்வோம்நாம்
கிட்டும் இன்பம் நாள்தோறும்.
96. - பா. சபாசு ராசு, கருணாகர நல்லூர்.

கண்ணின் பார்வை தேக்கத்தால்
எண்ணும் ஏதும் செய்யாமல்
வண்ணத் தமிழைப் பார்க்காமல்
திண்மை குன்றி யுள்ளேனே.
97. - ஆ.வே.இராமசாமி, திருச்சி.

கண்ணே! மணியே! என்பெண்ணே!
"பெண்ணின் பெருமை" நீகற்றால்
விண்ணில் நிலவும் விண்மீன்போல்
மண்ணில் ஒளிர்வாய் எந்நாளும்!
98. - இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

படிக்கும் நேரம் ஒன்றுண்டு
துடிப்பாய்க் கொண்டு நீஎண்ணு
படித்தால் இன்பம் உண்டென்று
நொடியில் எண்ண வேண்டாமோ!
99. - வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.

கண்ணே! மணியே! கற்கண்டே!
வண்ண அமுதே! வார்ப்படமே!
எண்ண முடியா உயிர்ப்பொருளே!
மண்ணில் படரும் மாத்தமிழே!
100. - இரா.கு. அரங்கசாமி, தங்கவயல்.

அன்பும் அறனும் வாழ்வாகும்
அன்பின் வழியே பண்பாகும்
அன்பை எவரும் எப்போதும்
இன்பாய் ஏற்றல் காண்பீரே!
101. - செ.பொன்னம்மாள், செஞ்சிக்கோட்டை.

குற்றம் காணும் தன்மையால்
முற்றம் தேடி வந்தோரும்
சற்றும் மருண்டே ஓடாமல்
பற்றும் வழக்கம் கொள்வீரே!
102. - அர.கிரிசநாதன், இரிசிவந்தியம்.

தத்தம் மொழியின் மேன்மைக்குத்
தத்தம் செய்தல் தாழ்வாமோ?
நித்தம் கவிதை யாத்திட்டால்
சித்தம் தெளிவீர் சொத்தென்றே!
103. - இரா. அரங்கநாதன், கள்ளக்குறிச்சி.

வித்தின் விளைவே முத்தாகும்
முத்தின் மடங்கே கூடிட்டால்
முத்தாய்த் தமிழும் ஓங்கிட்டால்
வித்தே மகிழ்வின் சொத்தாகும்.
104. - தி. உசா, விழுப்புரம்.

கற்போர் கவிதை இன்பத்தில்
சொற்போர் ஆற்றல் கண்கூடே!
விற்போர் வீரர் சொற்போரில்
அற்பர் ஆவர் என்போமே!
105. - அர. அருண்குமார், விழுப்புரம்.

தேர்தல் காலம் வந்தாலே
தேர்வும் சேர்ந்து கொண்டாலே
தேர்ச்சி கொஞ்சம் தாழ்ந்திட்டால்
தேர்தல் தந்த தாழ்வென்போம்!
106. - தி. தமிழ்க்கொடி, ஆசனூர்.

படிப்பகம்

www.padippakam.com



வாழ்வில் தாழ்வு வந்திட்டால்
வாழ்வை நாமும் நோவோமா!
வாழ்வும் வீழ்வும் யார்கையில்?
வாழ்க்கை வாழும் நம்கையில்!
107. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

பெண்மை மென்மை காட்டிட்டால்
உண்மை ஆண்மை தாழ்வெய்தும்!
பெண்மை ஆண்மை கூடிட்டால்
கண்ணீர் அங்கே உண்டோசொல்!
108. - தி. மணிமேகலை, திருவாமாத்தூர்.

கற்கும் கல்வி கற்கண்டாம்!
கற்கும் செயலே நற்றொண்டாம்!
கற்போர் புகழும் ஓங்கிட்டால்
கற்றல் நன்றே என்போமே!
109. - பா. சத்தியா, வடலூர்.

மாறா அன்பு கொண்டேன்நான்
சீறா மல்நீ சீர்காண்பாய்!
வேறாய் உன்னை நான்காணேன்
கூறாய் தோழி உன்நெஞ்சை!
110.- இர. கிருட்டினகுமாரி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

நன்றே நாமும் செய்திட்டால்
நன்மை பலவும் சேர்ந்திட்டால்
ஒன்றாய் நாமும் வாழ்ந்திட்டால்
நன்மை நாட்டில் உண்டாகும்!
111. - க. பாலமுருகன், பனையபுரம்.

வயலை உழுவும் ஏராளி
வியர்வை நிலத்தின் சாறாக
அயர்வை அறியாத் தாளாலே
உயர்வைத் தருவார் வேறிலரே!
112. - திருவாட்டி. பெரியம்மாள், கல்லக்குறிச்சி.

நஞ்சும் தேனும் உன்னுள்ளே!
வஞ்சம் அன்பும் உன்னுள்ளே!
கெஞ்சல் பீற்றல் உன்னுள்ளே!
நெஞ்சைத் திருத்தி உயர்வாயே!
113. - வி.டி. இராமகிருட்டினன், சென்னை.

தமிழே நின்னைத் தாயென்பான்
உமியாம் மனத்தன் தேர்தல்கால்
இமியும் எண்ணான் மாற்றார்கால்
அமிழ்ந்து கிடப்பான் ஆட்சிக்கே.
114. - அ. இராவணன், நமச்சிவாயபுரம்.

விரைவாய் இருகை மேல்தூக்கித்
தரையில் விழுந்து தாள்தொட்டு
வரைவின் மகளைத் தாயென்றான்
சிறையில் சூடே இல்லாதான்.
115. - அ. இரணியன், நமச்சிவாயபுரம்.

வருக தமிழே வாவென்று
தருக தமிழே தண்ணாட்சி
பெருகப் பிழையைச் செய்தோரை
அருகச் செய்து மாய்ப்பாயே.
116. - புலவர் அய்யா. மோகன், கல்லக்குறிச்சி.

கண்ணின் மணியே தற்காக்கும்
மண்ணின் உயர்வே சொல்வேன்கேள்.
எண்ணில் உனைப்போல் வாழ்வர்யார்?
பெண்ணே 'புவியாம்' உண்மைதான்!
117. - கு. கோவிந்தன், செங்கம்.

எதிலும் எளிமை ஏற்காதான்
கதித்து முரித்த காட்டுண்டோ
மதியின் மயக்கம் மாண்பாமோ
பதித்த புகழும் பாழாமே!
118. - புலவர் த. ஆறுமுகம், சென்னை.

அருமை இன்ப ஒன்றில்லில்!
விரும்பி நாவில் தம்வாழ்வில்
திருவும் குடியும் மேலோங்கப்
பெருமைத் தமிழை ஓம்புங்கள்!
119. - மு. தமிழ்நிலவன், ஐயன்குடிப்பாளையம்.

அன்னை ஒருத்தி என்வாழ்வில்
அன்பு காட்டி பார்த்தாரே!
இன்பம் பாரா உள்ளங்கள்!
துன்ப வாழ்வும் எங்கள்மேல்!
120. - தி. உருபன், தி.கொ.அ.க.கல்லூரி.

நாட்டு மக்கள் துன்பத்தைப்
பாட்டில் எங்கு மேற்கொள்வேன்
வாட்டம் கொண்ட எம்மக்கள்
ஆட்டம் ஆடி வாழ்கின்றார்!
121. - மு. ஆனந்தன், ஆலகிராமம்.

மன்றில் தமிழே சொல்வாயே!
நன்மை அதற்குச் செய்வாயே!
என்றும் தமிழைக் காப்பாயே!
இன்பம் அதனால் காண்பாயே!
122. - புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

நந்தம் நாடு தென்னாடு
சொந்தம் கொண்டு பாடாற்றி
முந்திப் பாரில் நிற்கச்செய்
இந்தப் பிறவி சீர்கொள்வோம்.
123.- புலவர் அரங்க. பணிக்குன்றன், புதுரவை.

பொல்லா மதங்கள் பல்சாமி
இல்லா தொழிக்க இம்மண்ணில்
வல்லார் பெரியார் வாழ்ந்தாரே!
நல்லார் அவர்தொண் டேற்போமே!
124. - திருவேட்டகுடி அறவாழி.

www.padippakam.com



நல்ல நன்பர் நட்பிற்குச்
சொல்ல வார்த்தை இல்லைதான்
வல்ல பெற்றோர் அன்பிற்கு
வெல்ல ஏதும் இல்லைதான்!
125. - கு. திருஞானசம்பந்தம், அகரம்.

படிக்கும் மக்கள் எண்ணந்தான்
படிக்கும் செயலே செல்வந்தான்
படிப்பும் கருவி தான்என்ற
முடிவால் பெறலாம் தன்சிந்தை.
126. - புலவர் தி. பக்கிரிசாமி, தி.ரா.பாட்டினம்.

சீதை பெண்ணைக் கண்டேனே
பேதை மையாய்ப் போனேனே
தாதை கூற்றைக் கேளாவே
பாதை மாறிச் சென்றேனே!
127. - இர. சுசிலா, திருக்கோவிலூர்.

பெண்ணைப் பின்னால் தள்ளாமல்
பெண்ணைச் சமமாய்க் கொள்வாயே!
பெண்ணே நீயும் முன்னேறில்!
பெண்ணே கலகம் எங்கும்செய்!
128. - புலவர் சி. வெற்றிவேந்தன், பாகூர்.

பள்ளி செல்லும் பூவேநீ
அள்ளிச் சென்றாய் என்நெஞ்சை!
துள்ளி வந்து சேர்ந்திட்டேன்
சொல்லிச் சென்ற உன்சொல்லால்.
129. - வ. அரிகிருட்டிணன், மயிலம்.

பொழுது போக்காய் இல்லாமல்
எழுதும் பாக்கள் எல்லாமும்
அழுது வாழ்வோர் நெஞ்சத்தின்
பழுதை நீக்கின் நன்றாமே!
130. - பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.

தென்றல் நம்மேல் வீசிற்றே
இன்பம் நமக்குள் தோன்றிற்றே!
அன்பு காட்டும் மக்கள்நாம்
என்றும் களிப்பாய் வாழ்கின்றோம்.
131. - பா. விசய், கருணாகர நல்லூர்.

நாட்டில் சிறந்த ஆட்சிக்கே
ஏட்டில் எழுதி வைத்தாலும்
வீட்டில் திட்டம் இல்லாமல்
நாட்டின் வளர்ச்சி என்னாகும்?
132. - பா. பிரவின், கருணாகரநல்லூர்.

கற்ற கல்வி யைப்போற்றிப்
பற்றுக் கொண்டு வாழ்ந்திட்டால்
சுற்றம் உன்னை அன்போடு
குற்றம் இன்றி வாழ்விக்கும்.
133. - அ. செயபால், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பூவில் அமரும் வண்டேஎன்
பாவில் அமர்வ தேனோ?நின்
நாவில் இனிப்பும் இல்லையோ?
கோவில் தோட்டம் உண்டிங்கே!
134. - சு. முகிலரசன், காந்தி நகர்.

ஊற்றாய் உன்றன் எண்ணங்கள்
ஆற்றாத் துயராய்த் துன்புற்றே
ஏற்றம் இன்றி வாகின்றோம்
காற்றில் கலந்த என்மூச்சே!
135. - ந.சு. மணிமேகலை, காந்தி நகர்.

மண்ணில் உயர்வு வேண்டுங்கால்
பெண்டிர் நலத்தைப் பேணென்றே
எண்ணிப் பெரியோர் சொன்னாரே
கண்ணின் மணிகாள் கற்பீரே!
136. - மணிமேகலைகுப்புசாமி, புதுச்சேரி.

எண்ணம் இமய வெற்பாக
எண்ணி இருப்பாய் என்றென்றும்
உண்ண உணவை உற்பத்தித்
திண்ண முடனே செய்வாயே!
137. - ம. கேசவன், வெள்ளம்பாக்கம்.

எண்ணும் எழுத்தும் கண்ணாகும்
மண்ணும் உழைத்தால் பொன்னாகும்
பண்பே வாழ்வில் மேலாகும்
கண்ணே நீயும் கற்றுக்கொள்!
138. - அரிமா. இளங்கண்ணன், சென்னை.

பாடும் தமிழைப் பல்லாண்டாய்த்
தேடி ஆய்ந்த சீராளர்
நாடும் படங்கள் நாம்காண
நாடிச் செய்தோர் நல்லோரே!
139. - புலவர் நாவை. சிவம், மணற்பாறை

தாயாம் தமிழைக் காப்பாற்ற
சேயாம் பலரும் தீய்ந்தாரே!
தீயர் நாடாள் மன்றத்தில்
வாயை மூடி நின்றாரே!
140. - சா. கண்ணன், புதுச்சேரி.

"கண்கள் காணும் இன்பத்தை
உண்மை என்று நம்பாதே
அன்பின் உள்ள இன்பத்தை
நண்பா நீயும் மேற்கொள்வாய்!
141. - மு. ஆனந்தன், தி.கொ.அ.க.கல்லூரி.

எங்கே பிறந்தும் ஒன்றானோம்
இங்கே கண்டோம் நட்பானோம்
திங்கள் இரண்டில் திக்கேகி
எங்கே இனிக்காண் போம்நண்பா!
142. - ஆ. சூசை, தி.கொ.அ.க.கல்லூரி.

www.padippakam.com



வண்ணச் சொல்லும் தானேற்றிப்
பண்ணை எல்லாம் சீராட்டி
மண்ணைப் போற்றும் மாண்போடு
விண்ணும் போற்ற வாழ்வாயே!
143. - த. அன்புக்கனி, தி.கொ.அ.க.கல்லூரி.

உலகம் தழைக்க ஒன்றாவோம்
மலரும் நினைவால் நன்றாவோம்
நிலவும் உலகில் எந்நாளும்
பலவும் கற்க வேண்டும்நீ
144. - க. இளமதி, தி.கொ.அ.க.கல்லூரி.

உன்னைப் போற்றும் நெஞ்சத்தில்
தன்னைக் காக்கும் பண்பாலே
என்னை மாற்றி நான்வாழ்ந்தும்
உன்னை மறக்க மாட்டேனே.
145. - கு. இளவரசி, தி.கொ.அ.க.கல்லூரி.

இனத்தை மொழியைக் காவாதான்
பிணமே யுலகில் எந்நாளும்
பிணமாய்த் தமிழா வாழ்வாயேல்
மணமில் மலராய்ப் போவாயே
146. - ச.ந. இளங்குமரன், நாகலாபுரம்.

பொல்லா மதுவைப் போக்காமல்
எல்லா இடத்தும் விற்கின்ற
பொல்லா அரசு போய்மாய்க!
நல்ல அரசாய் நாம்தேர்வோம்!
147. - ச. தேன்மொழி சண்முகம், ஒசூர்.

சாதி ஒழியா தென்றிட்ட
மூதி! பிறரின் கால்வீழும்
நாதி யற்ற காந்தன்சொல்
ஊதி யழிக்க ஊற்றம்கொள்!
148. - த. குமாரசாமி எசுதர், கருவூர்.

உணவும் உடையும் உள்ளாராய்
பணமும் புகழும் பெற்றாராய்
குணத்தில் குன்றாய் நின்றேதான்
மனத்தில் மகிழ்வைக் காண்போம்நாம்!
149. - சா. சம்பத்து, பெருமாங்குப்பம்.

விண்ணை நோக்கும் தூரத்தில்
கண்ணைக் கவரும் விண்மீன்கள்
மண்ணைப் பார்த்துக் கூறும்நீர்
பெண்ணைப் போற்றிக் கூறுங்கள்
150. - இர. செனோவா, தி.கொ.அ.க.கல்லூரி.

நெற்றி வியர்வை போடுங்கள்
வெற்றி வழியைத் தேடுங்கள்
பற்றில் பணிவை நாடுங்கள்
கற்றே உயர்வைக் கூடுங்கள்
151. - ம. செயலட்சுமி, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பாடற் பொருளாய் மேலோங்கத்
தேடற் கரிய செல்வங்கள்
கூடற் கெளிய பாதையே
வாடற் கியலா நன்மையே
152. - உலோ. சுப்பிரமணியன், புதுப்பெருங்களத்தூர்.

அண்ணல் நெறியைப் பின்பற்றி
உண்மை விதையை யூன்றாமல்
பண்ணில் இசைத்துப் பாராட்டி,
மண்ணில் பதராய்ப் போகாதீர்.
153. - அ. இலக்குமனன், திருநள்ளாறு.

சிறுகு மூந்தை உள்ளத்தில்
நறும லராய்வி ருப்பம்தேன்
பருகும் நாவில் கள்ளிப்பால்
தரும்சூழ் நிலைஎன் றேமாறும்?
154. - அ. சரவணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

மண்ணில் மகளிர் நாளின்று
கொண்டா டிடும்இந் நாள்தன்னில்
பெண்ணைப் பெண்ணாய்ப் பாருங்கள்
பெண்ணின் மதிப்பைத் தாருங்கள்!
155. - இரா. சரண்யா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

வாழ்க்கை என்னும் பூந்தோட்டம்
வாழ்ந்து காட்ட நம்கையில்
தாழா உழைப்பே மூச்சென்று
வாழ்ந்தால் உயரும் நம்வாழ்வு
156. - கு. சுரேசு, திண்டிவனம்.

அன்பும் நட்பும் ஈவோன்யார்?
துன்பம் நீக்கும் தூயோன்யார்?
என்பும் நல்கும் நல்லோன்யார்?
என்றும் நல்ல நண்பன்தான்!
157. - வெ. பரமசிவபாண்டியன், சின்னாளபட்டி.

அன்னைத் தமிழும் பேசாமல்
முன்னைப் புகழும் காவாமல்
பின்னைப் புன்மை நாவேந்தும்
தொன்னைத் தமிழர் வாழ்வாரோ?
158. - மு.வே. கங்காதரன், சென்னை.

கற்போம் கற்கும் பேரார்வம்
உற்றார் கலையாம் கற்பிப்பில்
பெற்றோர் போன்ற ஊக்கந்தான்
பெற்றால் நாளும் இன்பந்தான்!
159. - இரா. சத்யா, சுசீலா ஆ.ப.நி.

கற்போம் நாளும் காலத்தே
கற்பிப் பதிலே ஞாலத்தில்
உற்று நோக்கல் செய்திட்டால்
பற்றாம் பலவும் உண்டென்பர்
160. - அ. பிரபாகரன், சுசீலா ஆ.ப.நி.

படிப்பகம்

www.padippakam.com



கல்வி அற்ற மாந்தர்க்கே
இல்லை மதிப்பு இம்மண்ணில்!
கல்லா ஒருவர் வாழ்க்கையில்
இல்லை சிறப்பே என்போமே!
161. - வெ. சிவக்குமார், சு. குளத்தூர்.

உற்று நோக்கிப் பெற்றிட்ட
கற்றல் திறனைக் கைக்கொண்டு
நிற்றல் வேண்டும் அன்பர்கள்
பற்றும் நிலைமை எய்தற்கு!
162. - மா. சரவணன், புதுமோகூர்.

அண்ணா கண்ட இக்கட்சி
தொண்டு செய்யும் நற்கட்சி
பண்டு செய்தோர் நற்றொண்டை
இன்றும் தொடர வேண்டாமா?
163. - செ. பாலமுருகன், கள்ளக்குறிச்சி.

அன்னை நம்மை பெற்றிட்டாள்
தென்னை போலக் காத்திட்டாள்
இன்பம் தந்தே போற்றிட்டாள்
அன்பு கொண்டே காப்போமே!
164. - ஆ. அகிலா, சுசீலா ஆ.ப.நி.

எங்கும் எதிலும் முன்னேற்றம்
தங்கும் வாழ்வில் மேலோங்கப்
பொங்கும் இன்பம் பெற்றோங்க
மங்கா முயற்சி வேண்டாமோ?
165. - ப. அருள்முருகன், சுசீலா ஆ.ப.நி.

உற்று நோக்கல் நன்றென்றே
கற்றுக் கொண்ட நாமெல்லாம்
சற்றும் சோர்வு கொள்ளாமல்
கற்றல் பணியை மேற்கொள்வோம்.
166. - பெ. சியாமளா, சுசீலா ஆ.ப.நி.

கற்றல் கலையில் பேரார்வம்
கற்றோர் பெறுதல் நன்றென்பேன்;
கற்கும் முறையைச் செம்மையாய்க்
கற்பித் தலிலும் காட்டுங்கள்!
167. - சி. அம்மு, சுசீலா ஆ.ப.நி.

கண்ணும் கருத்தும் கொள்வோரே
மண்ணில் மகிழ்வாய் வாழ்தல்போல்
எண்ணில் எழுத்தில் ஈர்ப்பாக
எண்ணங் கொண்டோர் வாழ்வாரே!
168. - அ. இரேவதி, சுசீலா ஆ.ப.நி.

நூல்கள் பலவும் கற்றாலும்
நாலும் இரண்டும் கற்றாற்போல்
ஆலும் வேலும் போலாமோ?
நாலும் தெரிந்த ஆன்றோரே!
169. - த. சக்திவேல், சுசீலா ஆ.ப.நி.

இழிவாய் மாறும் நம்கல்வி
அழிவைத் தருவ தையோர்ந்து
பழியைப் போக்கக் காண்போமே
வழியொன் றை!வாழ்த் தும்நாடு!
170. - சோ. கனிமொழி, புதுச்சேரி.

"அற்றைத் திங்கள் இம்மண்ணில்
கற்றோர் போற்ற வாழ்ந்தோமே!
இற்றைத் திங்கள் நம்மண்ணில்
மற்றோர் எள்ள வாழ்வீரோ!
171. - சோ.அ.சுந்தரி, புதுச்சேரி.

அண்ணன் தம்பி என்பார்க்கும்
எண்ணம் ஒன்றாய்ச் செல்லாதே
திண்மை என்றே கைக்கொண்டு
வண்ண மாக்கி(டு) உன்வாழ்வை!
172. - ஆ.சோ. இளஞ்செழியன், புதுச்சேரி.

"நாடும் வாழ்வை நன்றாக்க,
ஆடும் மனதைச் சீராக்கிக்
கேடு நீக்கி வாழ்வாய்நீ!
பாடும் சிறக்க வெல்வாய்நீ!"
173. - ஆ. அறிவரசன், புதுச்சேரி.

வருவர் ஐயா நாடாள
சுருட்டி நாட்டைக் கக்கத்தில்
செருகி வைத்துச் செம்மாப்பார்
உருகி யும்மை விற்காதீர்!
174. - சு. இலம்போதரன், சென்னை.

கொண்டோன் கொண்ட தீநெஞ்சால்
பெண்டாட் டியைக்கை விட்டாலே
பெண்ணை யீன்ற பெற்றோரின்
கண்கள் பொழிநீர் ஆறாகும்
175. - வீ. வில்வநாதன், வெங்காலூர்.

வீட்டில் இல்லாப் பண்பையும்
காட்டில் இல்லா நன்மையும்
நாட்டில் இல்லா உண்மையும்
ஏட்டில் என்றும் காண்போமே!
176. - செ. மரியாள், நெய்வேலி.

வன்சொல் கூறார் இல்வாழ்க்கை
என்றும் உயரும்; அவ்வாறே
அன்பாய்க் கூறும் இன்சொல்லால்
நண்பர் உறவும் மேலோங்கும்.
177. - அ. அண்ணாதுரை, தி.கொ. அ. க.கல்லூரி

நாட்டில் வேண்டும் நன்மைகள்
வீட்டில் வேண்டும் திண்ணைகள்
பாட்டில் வேண்டும் நற்சொற்கள்
ஏட்டில் வேண்டும் நற்கொள்கை.
178. - சி. சுகந்தி, தி. கொ. அ. க.கல்லூரி.

படிப்பகம்

www.padippakam.com



பெண்ணின் பெருமை பேசிப்பின்
மண்ணில் புழுவாய் மதிஎண்ணாதே!
எண்ணில் கொடுமை செய்யாதே
கண்ணீர்க் கடலுள் ஆழ்த்தாதே!
179. - வே. ச. திருமாவளவன், புதுச்சேரி.

ஆற்றல் உருவம் உள்ளத்தே
ஊற்றால் தோன்றும் ஊக்கத்தால்
போற்றும் நெறியின் ஆக்கத்தால்
ஏற்றம் பெற்றாய் எந்தாயே!
180. - சா. இராசலிங்கம், திருவண்ணாமலை.

"தமிழே! துணையே! நீயேநல்
அமிழ்தின் இனியை! என்னையே
உமிழா துனுளத் தில்ஏற்பாய்
கமழும் வாழ்க்கை என்றென்றும்"
181. - க. அன்புக்கோகிலா, செஞ்சி.

"நன்றாய்ப் படிக்கும் பிள்ளைகள்
என்றும் போற்றும் பிள்ளைகள்"
என்றே சொல்லக் கேட்டுள்ளோம்
நன்றே அதுபோல் வாழ்வோமே.
182. - ஆ. முகிலரசி, ஆர்க்காடு.

பண்பின் பயனே அன்பென்பர்
மண்ணின் மாண்பே பண்பென்பர்
பண்பும் பயனும் சேர்ந்திட்டால்,
விண்ணும் மண்ணும் பொன்னாகும்.
183. - கொ. எட்டையனார், சுசீலா ஆ. ப. நி.

பாரின் வளத்தைத் தான்மட்டும்
வாரிக் கொழுக்க கைக்காட்டும்
ஊரை உலகைப் பாழாக்கும்
தாரா எமய மாக்கல்தான்.
184. - ஆ. கோவிந்தராசலு, கரிக்கலாம்பாக்கம்.

என்தாய்த் தமிழை எந்நாளும்
என்கண் மணியாய்க் காக்கின்றேன்!
நன்றாய்த் தமிழே நாடாள
என்றும் கதிராய்க் காய்கின்றேன்!
185. - படைக்களப்பாவலர், ஆர்க்காடு.

தேர்தல் நோக்கம் மேன்மையே!
தேர்தல் பயத்தல் நன்மையே!
கூர்ந்தே நாமும் தேர்வோமே!
ஆர்வம் மிக்க நல்லோரை!
186. - த. பாண்டியன், சுசீலா ஆ. ப. நி.

நட்பின் சிறப்பால் முன்னேற்றம்
நட்டா ருள்ளே உண்டென்க!
நட்பின் முறிவால் இன்னல்கள்
வட்ட மாகச் சூழுங்காண்!
187. - த. தெய்வானை, விழுப்புரம்.

நாடு தோறும் சென்றாலும்
காடு வழியே வாழ்ந்தாலும்
கூடு விட்டுப் பாய்ந்தாலும்
வீடு பேற்றை ஏற்பாரோ!
188. - இரா. பிரவினா, தி. கொ. அ. க.கல்லூரி.

அன்னை தந்தை கும்பிட்டே
உன்னை நீயே மாற்றிட்டால்
துன்பம் என்றும் அண்டாது
நன்மை நீதான் துய்ப்பாயே!
189. - இதயகீதன், தேனி.

"மண்ணில் நிலைத்து வாழத்தன்
கண்ணின் மணிபோல் என்றும்நம்
பெண்ணின் பெருமை காப்போமே
எண்ணும் நிலைக்குச் சேர்வோமே!"
190. - சா. அமீதா, தி. கொ. அ. க.கல்லூரி

அயலார் எவரும் ஏந்தாரே
செயலால் நம்மைப் போற்றாரே
புயலாய்ப் புரட்சி செய்தாலும்
உயரா தவரால் நம்வாழ்வே!
191. - இலெ. அ. அகத்தியன், சிறுமிளை.

தன்ன லத்தால் மற்றோரை;
இன்னல் செய்து வாழ்வோர்கள்;
சன்ன மாக வீழ்வார்கள்;
துன்பப் பட்டுத் தாழ்வார்கள்!
192. - செ. அ. கார்க்குழலி, ஓடாக்கநல்லூர்.

சண்டை தமக்குள் போட்டார்கள்;
பண்டைத் தமிழர் செத்தார்கள்;
இன்றும் தமக்குள் சண்டைதான்!
என்று நிமிரும் இந்நாடே?
193. - புலவர் அ. சான்னயைன், புவிகரம்பலூர்.

உண்ணாள் உறங்காள் ஓய்வின்றிக்
கண்போல் நம்மைக் காப்பாள்நல்
எண்ணம் ஊட்டும் தாயின்றி
மண்ணில் எவரும் வாழ்வாரோ?
194. - இரா. மகாலட்சுமி, தி.கொ.அ.க.கல்லூரி.

தொடர்வாய் வாழ்வைக் கல்விக்காய்
படிப்பாய் என்றும் நன்னூல்கள்
விடுப்பாய் தீமை என்றென்றும்
கிடப்பாய் தமிழின் இன்பத்தில்
195. - இர. பொன்னி, திண்டிவனம்.

நெஞ்சில் அகலா உன்பிம்பம்
பஞ்சாய் எரியும் உன்பார்வை
வஞ்சி எனையே நாள்தோறும்
நஞ்சே இலாமல் கொல்லாதோ!
196. - ந. தேவி, திண்டிவனம்.

படிப்பகம்

www.padippakam.com



பெற்ற பெண்ணைக் காசுக்கே
விற்றுக் குடிக்கும் மாமாந்தன்
இற்றை நாளில் உள்ளானே!
அற்றுப் போகும் நாள்எந்நாள்?
197. - கூத்தரசன், புதுச்சேரி.

பெண்ணைப் போற்றிச் சீராட்டிக்
கண்ணைப் போலக் காத்தார்கள்
விண்ணை முட்டும் பார்ராட்டை
மண்ணும் போற்றக் கண்டார்கள்
198. - பாவலர் வ. பழனி, புதுச்சேரி.

பூப்போல் மணமே வீசட்டும்
தோப்பாய் இன்பம் சூழட்டும்
பாப்பண் இசையே கூட்டட்டும்
முப்பில் தமிழ்மு ழங்கட்டும்.
199. - ஆ. சோதிமலர், விளாப்பாக்கம்.

சொல்லால் செயலால் தொண்டாற்று
நல்லோர் போற்ற நன்றாற்று!
வெல்லுஞ் செயலால் வேர்கொள்வாய்
எல்லார் உளத்தும் நீவாழ்வாய்!
200. - தேன்மொழி, ஆர்க்காடு.

நமக்குள் ஓடும் செங்குருதி
சுமையாம் உடலுக் கென்றாலோ
இமைக்கும் நொடியில் மாண்டிடுவாய்
தமிழும் நம்முள் அஃதொன்றே!
201. - இ. தாவிது பிரபாகர், பாவாணர் நகர்.

பாடல்களிலும் முகவரியிலும் பெயரிலும் வடமொழி எழுத்துக் களை நீக்குக. - ஆசிரியர்

## பாடல் படைத்திடுக வஞ்சி விருத்தம் - 13

தானே உணர்வான் தலையாவான்
ஏனோர் உணர்த்த உணர்வானேல்
மானே அவன்தான் இடையாவான்
ஈனன் எதிலும் உணராதான்.

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : மா+மா+புளிமாங்காய்
3. இவ்வாறான நான்கடிகள் ஓரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 31-03-2006 க்குள் விடுக்க. - புலவர் அரங்க. நடராசன்

## தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனார்க்குப் பிறந்த ஊரில் பாராட்டு விழா

தி.ஆ. உ0௩௪எ தை ௩0 ஆம் நாள் (12-2-2006) தமிழ்மாமணி விருதினைப் பெற்ற சாலையூரைச் சேர்ந்த புலவர் மு. இறைவிழியனார்க்குச் சாலையூர் மக்கள் சார்பில்பாராட்டு விழா நடந்தது.

புலவ்ரின் நண்பர் திரு. செ. தேவராசு அவர்கள் வரவேற்புரை யாற்றினார். அறங்காவற்குழுத்தலைவர் திரு. தெ. மோகன்ராசு அவர்கள் தலைமை ஏற்றார். ஊர்ப்பெரியவர்கள் திரு. கோ. பரசுராமன் அவர்கள், திரு. கி. கண்ணையன் அவர்கள் திரு. வி. நமச்சிவாயம் அவர்கள் முன்னிலை ஏற்றனர். புலவர் மு. இறைவிழியனாரின் ஏற்புரைக்குப்பின் அறங்காவற்குழுத் துணைத்தலைவர் திரு. அ. சொக்கலிங்கம் அவர்கள் நன்றியுரைத்தார். புலவரின் நண்பர்களும் ஊரின் இளைஞர்களும் திரளாகக் கலந்து கொண்டு புலவரைப் பாராட்டினார்.

www.padippakam.com



## நற்றமிழ்த் திங்கள் இதழின் வெளியீட்டு விளக்க அறிக்கை

(நடுவணரசு செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1856, 19 (ஈ) ஆ வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

வெளியிடும் இடம் : 43, அங்காடித்தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி-5.
காலமுறை : திங்கள் ஒரு முறை
அச்சிடுவோர் பெயர் : ந. இளம்பூரணன்
அகத்தியர் அச்சகம், இராசய்யர் தோட்டம், புதுவை-13.
வெளியிடுவோர் பெயர் : மு. இறைவிழியன்
இனம் : இந்தியர்
முகவரி : 43, அங்காடித்தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி-5.
ஒரு விழுக்காட்டுக்குமேல் முதலீடு செய்துள்ள
தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம்
பெயர்களும் முகவரிகளும்
மு. இறைவிழியன்
43, அங்காடித்தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி-5.

மு. இறைவிழியனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

புதுச்சேரி
31-3-2006
மு. இறைவிழியன்
(ஒப்பம்)

## புலவர் செ. வரதராசனார் மடல்

தங்கட்குப் புதுச்சேரி அரசு தமிழ்மாமணி விருது வழங்கி இருக்கும் சிறப்பறிந்து மகிழ்கின்றேன். 8.1.2006 ஞாயிறன்று தங்கட்கு பாராட்டுவிழா நூல்விளையாட்டு விழாக்கள் நிகழ்ச்சிகள் நன்று தங்கட்கு தமிழ்மாமணி வழங்கி முதல்வர் மாண்புமிகு அரங்கசாமி அவர்கட்கு விழா மகிழ்வான விழாச்சூழ்நிலை, விழாக் கவியரங்கிற்கு நமது நண்பர் புலவர் திரு. மெகா தலைமை! தங்கள் பாராட்டு விழா மகிழ்வுற நிகழ்வுறுக! தாங்கள் நெடிதினிது பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன் பொங்கு தங்கள் புகழ்.


## கம்பன் ஆய்வு நூல் பரிசு திட்டம்

### பரிசு தொகை உரூ. 5000/-

கம்பனையும் கம்பஇராமாயணத்தையும் ஆராய்ச்சி செய்து, தமிழில் எழுதப் பெறும் ஆய்வு நூல்கள் இத்திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். நூல்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 15-04-2006.

நெறிமுறை விவரங்களுக்குப் பின்வரும் முகவரிக்கு எழுதுக.

**தி. முருகேசன்,** தலைவர்
கம்பவாணர் புலவர் அ. அருணகிரி அறக்கட்டளை
40, முத்துமாரியம்மன் கோயில் வீதி, புதுவை - 605 001.

www.padippakam.com



# நூல்-அறிமுகம்

**நம் குறள் மறை கூறும் இல்வாழ்வு இன்பியல் (உரிய உரை)** ஆசிரியர் : ஆய்வறிஞர் ப. அருளியார்; வெளியீடு : வேரியம் பதிப்பகம், அகராதியகம், 502 (466) வழுதாவூர்ச் சாலை, முத்தரையர்பாளையம், புதுச்சேரி - 605 009. விலை உரு. 25/-

திருக்குறளுக்கு இக்காலத்தில் பலரும் உரை எழுதுகின்றனர். அவற்றுள் சிலரின் உரைகளே ஓரளவேனும் பயன் தருவனவாய் உள்ளன. அவ்வகையில் ஆய்வறிஞர் அருளியார் அவர்கள் காமத்துப் பாலின் 27 அதிகாரங்கட்கும் அப்பாலின் அடிப்படையான தலைவன் தலைவிக்குரிய அத்துப்பாலின் இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம் ஆகிய 2 அதிகாரங்கட்கும் அரிய உரை வரைந்துள்ளார். அவ்வுரைகள் நம் குறள் மறை கூறும் இல்வாழ்வு இன்பியல் (உரிய உரை) - என்றவாறு அமைந்துள்ளன.

அருளியாரின் முடுகிய நடையே அமைந்திருப்பினும் எளிய சொற்கள் ஆளப்பட்டு எளிதில் பொருள் விளங்குமாறு இருத்தல் பாராட்டிற்குரியதாகும். நடைமுறை வாழ்வியல் நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி விளக்கம் தரப்பட்டுள்ளது. மேலும் சில குறட்பாக்களுக்குத் துணை விளக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துணை விளக்கமும் இன்றிய மையாத செய்திகளை உணர்த்துமாறு உள்ளது.

சான்றாக,

'கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்' (1087)

என்ற குறட்பாவிற்குத் தரப்பட்டுள்ள துணைவிளக்கம் மிகமிக அருமையானது.

இன்பத்துப்பாலுக்கு உரை எழுதுவார் பெரும்பாலும் பிறர் எழுதியதையே எழுதிச் செல்வர். ஆனால் அருளியார் அவ்வாறின்றிப் புதிய விளக்கம் தருவதுடன் பண்பாடு கெடாதவாறு சீரிய சான்றுகளுடன் விளக்கவுரை வரைந்துள்ளது பாராட்டிற்குரியது.

அறத்துப்பாலில் இல்வாழ்க்கை அதிகாரத்தில்

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை'. (41)

என்ற குறட்பாவில் வரும் இயல்வுடைய மூவர்க்கு அரசர், (தமிழ்) அந்தணர், பிற தொழிலாளர் என்று மூவரைக் குறித்துள்ளார். பரிமேலழகரோ ஆசாரியனிடத்தினின் நோதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும் இல்லை விட்டு வனத்தின்கண் தீயொடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தானும் முற்றுந் துறந்து யோகவொழுக்கத்தானும் என மூவரைக் குறித்துள்ளார்.

பரிமேலழகர் கருத்தை ஏலாமல் பலரும் மூவர்க்குப் பல்வேறு கருத்துக்களைக் கூறிவருகின்றனர்; ஆனால் பேராசிரியர் சுந்தர

படிப்பகம்

www.padippakam.com



சண்முகனார் தம் உரையில் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகியோரே இல்வாழ்வானுக்கு இயல்புடைய மூவர் ஆவர் எனக்குறித்துள்ளார். இவ்வுரையே பொருத்தமானதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் தென்புலத்தார் (43) எனத் தொடங்கும் குறளில் 'தான்' என இல்வாழ் வானைத் தனியே குறிப்பிட்ட வள்ளுவர் பெற்றோர், மனைவி, மக்களை எப்படி மறந்திருப்பார்? அவர்களை ஒக்கலில் சேர்ப்பது முறையாகுமா? ஆனால் அருளியார் 'தான்' என்பதில் தன் குடும்பத்தாரையும் சேர்த்துவிட்டார்,

'இறந்தார்' என்பதற்கு ஈமக்கடன் ஆற்றுவார் இல்லாது இறந்துவிட்ட ஒக்கல் உறவுக்காரர் எனப் பொருள் கொள்கிறார். ஆனால் பரிமேலழகர் ஒருவருமின்றித் தன்பால் வந்து இறந்தார் என்றே பொருள் கொண்டார். பிற உரையாசிரியரும் அவ்வாறே பொருள் கொண்டுள்ளனர்.

உரைகளின் வேறுபாட்டை உரை வல்லுநரின் ஆய்வுக்கு விடுகிறேன். பிற அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றுக்கும் ஆய்வறிஞர் அருளியார் உரை வெளியிட வேண்டுமென எனது விழைவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். - இறைவிழியன்

**"நம்பிக்கை உமக்குள்ளே"**; ஆசிரியர் : பாவலர் மு.கு. இராமன்; வெளியீடு : பாவலர் மு.கு. இராமன், கலை இலக்கியப் பெருமன்றம், 313, புதுவைப் பெரிய கடை, புதுச்சேரி - 605 001; விலை : உரு. 70/-

இந்நூலில் "அரசியல், பெண்ணியம், சமூகவியல், பொது இயற்கையியல்" என ஐந்து இயல்களுடன் தமிழ்த்தாயை வணங்குவோம், சர்வதேச தொழிலாளர் பாடலைச் சேர்த்து எண்பது பாடல்கள் உள்ளன. பாடல்கள் அனைத்திலும் இன்றைய அரசியல், சூழலில் சிக்கித்தவிக்கும் குமுகாயத்தைச் சுட்டிக்காட்டிச் சாடுகிறார் நூலாசிரியர் பாவலர் மு.கு. இராமன்.

காட்டும் ஒரு பாடல் :

"கோழை, எடுபிடி வேலை செய்து தலைவராகிறார்
ஏழை என்று மக்களிடம் ஓட்டு கேட்கிறார்
வாய்ப்பைப் பயன்படுத்திச் சொத்து சேர்க்கிறார்
ஏய்ப்பையே தொழிலாக்கிக் கொள்ளையடிக்கிறார்"

இதைப் போன்ற பாடல் அடிகள் இந்நூலில் நிறைய உள. மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்நூல்.

**"திருக்குறள் நயவுரை"** உரையாசிரியர் : **"திருக்குறள் நம்பி" தங்க - பழமலை**; வெளியீடு : அருள்மொழி; வெளியீடு, 150, தெற்குத் தெரு, திருக்கோவலூர் - 605 757; விலை : உரு. 120/-

திருக்குறளுக்குப் பல உரைகள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்நிலையில் "திருக்குறள் நயவுரை" என்னும் இவ்வுரை நூலை மிகச் சிறப்பாகப் படைத்திருக்கிறார் உரையாசிரியர் "திருக்குறள் நம்பி" தங்க. பழமலை.

திருக்குறள் உரையாசிரியர்கள் பரிமேலழகர், முனைவர் மு. வரதராசனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் ஆகியோர்

படிப்பகம்

www.padippakam.com



உரைகளுடன் ஒப்பு நோக்கும் உரையாக நயம்பட எடுத்துரைத்திருக்கிறார் இந்நூலாசிரியர்.

காட்டுக்கு ஒருரை :

“இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பபைக்கு
இடும்பை படாஅ தவர்”

“வாழ்க்கையில் நேரிடும் துன்பத்திற்குத் துன்பம் படாதவர்கள் அத்துன்பத்திற்கே துன்பம் விளைவிப்பவர் ஆவார்”, “அறிவுள்ளவன் சிந்திக்கத் துன்பம் கெடும்” என அனைவரும் அறிந்துணரும் வகையில் நயவுரை அளித்திருக்கிறார் உரையாசிரியர் தங்க. பழமலை. திருக்குறளன்பர்கள் விரும்பி வாங்கிப் படிக்க உரு. முப்பதுக்கு (உரு. 30/-) இந்நூல் வாங்கப் படுகிறது. வள்ளுவம் தழைக்க வாங்கிப் பயன்பெறுக.

📚 **“வில்லிச்சரம்-2; வில்லிச்சரம்-3”**; ஆசிரியர் : **வில்லியன்**, வெளியீடு : வில்லியன், 57, சர்தர் வல்லபாய் பட்டேல் சாலை, புதுச்சேரி - 605 001; விலை : ஒவ்வொன்றுக்கும் உரு. 35/-

“வில்லிச்சரம் 2” இல் உள்ள “வீடு நோக்கி” எனும் இந்நாடகம் வங்கக் கவிஞர் தாகூர் எழுதிய நாடகத்தின் தமிழாக்கம் ஆகும். இந்நாடகத்தை மூன்று களங்களில் அமைத்திருப்பதுடன், நாடக ஆசிரியர் “வில்லியன்” என்னும் நல்ல. கோதண்டராமன் சிறந்த தமிழ்ப் பாவலர் என்பதால் நாடகத்தில் ஆங்காங்கே பாடல்களையும் சேர்த்துச் சிறப்பாக அமைத்திருக்கிறார்.

“வில்லிச்சரம் 3” இந்நாடக நூலில் தாகூரின் இரண்டு நாடகங்கள் “புலைச்சி”, “உயிர்ப்பலி” எனும் பெயரில் தமிழில் மொழியாக்கம் செய்து நாடகங்களைச் சிறப்பாகப் படைத்திருக்கிறார் ஆசிரியர் வில்லியனார். இவ்விரண்டு நாடகங்களையும் சிறு சிறு நிகழ்ச்சியாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஓரங்க நாடகமாகவே இனிய உரையாடல்களுடன் அளித்திருக்கிறார் வில்லியனார். “குரங்குக்கை” எனும் ஆங்கில நாடகத்தின் தமிழ்மொழிபெயர்ப்பும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. நாடகச் சுவைஞர்களுக்கு இவ்விரு நூல்களும் நல்ல விருந்தாகும்.

📚 **“பேராசிரியர் பா. வளன் அரசு 66 ஆவது பிறந்த நாள் பெருமங்கல விழா மலர்”**

பேராசிரியர் பா. வளவன் அரசு ஆற்றிய தமிழ்த்தொண்டைப் பாராட்டியும், வாழ்த்தியும் சான்றோர் பெருமக்கள் நாற்பத்து மூவர் அளித்த பாடல்கள், கட்டுரைகளின் தொகுப்பே இச்சிறப்பு மலராகும். பாவலர் த.மு.சா. காசாமைதீன், நல்லாசிரியர் க.ஞா. சாண்பீற்றர், இளமுனைவர் செ. பிரமசக்தி ஆகியோர் இம்மலரை நன்முறையில் தொகுத்தவர்களாவர்.

பேராசிரியர் பா. வளன் அரசைப்பற்றி அறிந்து கொள்ள இம்மலர் நன்குதவும். (இம்மலரின் அன்பளிப்பு உரு. 50/-)

**- புலவர் செ. இராமலிங்கன்.**

www.padippakam.com



# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

"யாதும் ஊரே" இதழ் தயாரிப்புப் பொறியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் "நற்றமிழ்" ஆசிரியர் புலவர் மு. இறைவிழியனார் அவர்கள் பற்றிய நூலுக்கு கட்டுரை வழங்க இயலவில்லை. பொறுத்தருள்வீர்.

புரட்சிக்கவிஞர் வாழ்த்தில் வீறு நடையிடும் புதுவையின் வளர்ச்சியில் தமிழ் நாளிதழ்களுக்குப் பெரும் பங்கு உள்ளது.

"நற்றமிழ்" நாயகரான இறைவிழியனாரின் தமிழ்த் தொண்டு மேன்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன். நன்றி!

**- நாவை. சொக்கலிங்கம், சென்னை.**

தமிழ்மாமணி நற்றமிழ் ஆசிரியர் புலவர் மு. இறைவிழியனார் பாராட்டு விழா அனுப்புதல் கிடைக்கப் பெற்றது. மிக்க நன்றி. குருதிக்குழாய் அடைப்பு ஏற்பட்டு கடுமையானக உடல் நலம் பாதிக்கப் பட்டுள்ளதால் விழாவில் கலந்து கொள்ள இயலவில்லை. மனம் அங்கே தான் இருக்கும் திங்களும் செங்கதிரும்போல் செழிக்க நல்லாசி பெற்றுத் தமிழுக்குத் தொண்டு சொய்ய மனமார நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

**- வேலூர்ச் செந்தமிழ்க்கோ.**

பெரு மதிப்பிற்குரிய தமிழ்மாமணி புலவர் இறைவிழியனார் அவர்களுக்கு வணக்கம். நலமே. நாடுகிறேன். பொங்கல் வாழ்த்து களுடன் வந்து நிற்கிறேன். தங்களின் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு - அறிஞர்கள் பலரின் கருத்துரைகளையும், தங்களின் பெருமை யையும் கேட்டும், கண்டும் மகிழ்ந்தேன். தாங்கள் பல்லாற்றானும் புகழுடன் வாழ நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள். நேரிலும் கண்டு மகிழ்வேன். **- மு. இளங்கோவன், புதுவை.**

நற்றமிழ் இதழின் சார்பிலும், தமிழியக்கங்கள் சார்பிலும் தங்களுக்கும் புதுச்சேரி முதல்வர் அவர்களுக்கும் 8-1-2006 அன்று நடைபெற்ற பாராட்டரங்கில் வந்து கலந்துகொண்டு நிகழ்ச்சிகளைக் கண்டு மனம்மிக மகிழ்ந்தேன். தமிழ்த்தொண்டியற்றும் தங்களின் பன்முகப் பணிகளைக் கண்டுகேட்டு உணர வாய்ப்பாயிற்று.

என் ஆசிரியர்க்கு ஆசிரியராம் ஆ.சி. ஐயா, என் ஆசிரியர்கள், நான், என் மாணவர், என் மாணவரின் மாணவர் என ஐந்து தலை முறையினர் நற்றமிழில் பாப்புனைந்து வருகிறோம். வளரும் கவிஞர்க் கெல்லாம் வாய்ப்பளிக்கும் நற்றமிழின் பெருமை சொல் புகழ்ச்சி கடந்த ஒன்று.

விழாவில் யாவரின் பாராட்டுதல்களும் சிவப்பிரகாச அடிகளின் சொல்லாட்சியாகிய 'தகும் தகும் தகும்' என்பனவாகவே அவையினர் செவிமுழுவதும் நிறைந்தன. நற்றமிழில், வரும் திருவள்ளுவராண்டு முதல் 'மாணவர் பரிசு திட்டம்' என்பது போல் மாணாக்கரைத் திருக்குறள் முதலான நூல்களைப் படிக்கத் தூண்டும் நல்லதொரு பகுதியைப் புதிதாக அமைக்க வேண்டுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



மாணாக்கரின் பரிசை (இயல்பை) அறிந்து, பெயரை இதழில் வெளியிட்டுப் பெருமைப்படுத்துவதே உரிய பரிசிலாகும். வேறுபரிசில் வேண்டியதில்லை. - பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.

நற்றமிழ் ஏடாசிரியர் ஐயா அவர்களுக்கு வணக்கம். சுறவம் (தை) 15-1-2006 இதழ் என் இல்லம் வந்து இதயம் மகிழவைத்தது. திருக்குறளைப் போல் தலையங்கம் சுருக்கமாக இருந்தாலும் ஆழியின் ஆழம் போன்ற கருத்துணர்வை நன்கு விளக்கிச் சிந்தனையைத் துலக்கியது. கரிகாலனா? கரிக்காலனா? எனும் ஆய்வரங்கக் கட்டுரை தமிழருக்கும், மாணவ, மாணவியருக்கும் பயனுள்ளதாயிருக்கிறது. கண்டதைப் படித்துக் கண்குருடாகி, கருத்துக் குருடாகி, அறிவுக்குருடாகி விடுகின்ற இக்காலத்தில், தும்பைப் பூப்போன்ற தூயதமிழ் இலக் கணத்தோடு வரும் கொடுத்தபடி தொடுத்த பாடல்கள் ஒவ்வொன்றும் கால ஏட்டில் அழியாப் புகழ்க்குரியவை.

- "பாவலர் சுரபி" சுப. சந்திரசேகரன், சென்னை.

இத்திங்கள் 'நற்றமிழ்' வரப்பெற்றேன். 'புதுச்சேரி மாநிலத் துக்குத் தனிக்கல்வி வாரியம்' தலையங்கம் புதிய செய்திகளைப் புலப்படுத்தியது. மண்ணுலக வாழ்வியலில் வள்ளுவரும் பிளேடோவும் தமிழர் கண்ட அறவாழ்வுக்கு முன்னோடியாக வாழ்ந்ததை உய்த்துணரச் செய்த இயக்குநருக்கு இதய நன்றிகள்! புதுவையிலும் இந்தியா? மாபெரு முழக்கப் போராட்டங்கள் வளரட்டும். அடிமேல் அடி வைப்போம்! 'தொடுத்தலும் விடுத்தலும்' ப. அருளியாரின் நுட்பமான கருத்துக்கு அவ்வைப்பார்வையிலேயே விளக்கம் தெரிவித்துள்ளீர். தொடர்ந்து 'எத்துணை - எத்தனை' பற்றிய விளக்கம்... அப்பப்பா... எத்துணை தெளிவு! பேரா. இரா. மதிவாணன் அவர்தன் 'தொல்காப்பியர் பிறந்தநாள் கணிப்பு ஒவ்வொரு தமிழரும் படிக்க வேண்டிய கட்டுரைச் சுருக்கமாக விளங்கியது. எமது பள்ளியில் அனைவருக்கும் வாசித்துக் காட்டினேன். முதுபெரும் புலவர் வி.பொ.ப. அவர்களைப் பற்றிய செய்திகளுடன் அன்னார்தம் அகரமுதலி நூல் மதிப்பீடும் இத்திங்கள் - நம் இதழுக்கு அணிகலன்கள்! முனைவர் இரா. இளவரசு அவர்கட்கு நம் இயக்கம் சார்பான நன்றிகள். கொடுத்தபடி தொடுத்த பாடல்கள் நவில்தொறும் நல்லின்பம் தந்து சிந்திக்க வைத்தன. இளம்பாவலர் செய்த தவற்றைச் சுட்டிய விதம் நேர்த்தி! இலக்கை அடைய் புதுவை முதல்வர் வழியில் இணைந்து செயல் ஆற்றுவோம்.

- சு. வேல்மணி, சேலம்.

நற்றமிழ் 2037 கும்பம் இதழ் படித்தேன். நற்றமிழில் நான் அதிகம் விரும்பிப் படிப்பது கொடுத்தபடி தொடுத்த பாடல்கள். இவை அனைத்தும் அருமை! அதில் பொன். பசுபதி புதுவை அவர்கள் எழுதிய

சிங்கள நாடுறை செந்தமிழீர்!
எங்களை நம்புவீர்! ஒருநாளில்
உங்களைத் தாக்கிடும் சிங்களரை
மங்கிடச் செய்துமை விடுவிப்போம்.

இதுபோல் அனைத்துப் பாவலர்களும் பாடல் எழுதத் தொடங்கி விட்டால் தமிழனுக்கு இன உணர்வும் விடுதலை உணர்வும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. - அருவை தமிழன்பன், அருப்புக்கோட்டை.

www.padippakam.com



புலவர் மு. இறைவிழியனார் அவர்கள் தமிழ்மாமணி விருது பெற்றதை அறிந்து (பல நாளிதழ்கள் மூலமாகவும்) மிகவும் மகிழ்ந்தேன் - தமிழ் காக்கத் தமிழுக்காக - தமிழில் தமிழர்கள் படைப்புகளுடன் வரும் நற்றமிழ் பாரதியார் - பாரதிதாசன் - சாலை இளந்திரையனார் தமிழைப்போற்றிக்காக்கும் கூற்றோடு என்போன்ற தமிழ் ஆர்வலர்களுக்கு மிகவும் ஊக்கம் தருவதாக உள்ளது. வாழ்க வளர்க பல்லாண்டு

- ச. சிவராமன், தலைவர்.

புதுவை அரசின் 'தமிழ்மாமணி' என்னும் சிறப்பு விருது தங்களுக்கு வழங்கப்பட்ட செய்தி மகிழ்ச்சி அளித்தது. செய்தி தெரிந்தும், தொடர்ந்த மழையிருந்ததால் விழாவிற்கு வரஇயலாமல் போனமைக்கு வருந்துகிறேன். தகுதிசான்ற உங்களுக்கு அளிக்கப்பட்ட அவ்விருது மிகவும் பொருத்தமுடையதாகும். புதுவை அரசின் இத்தேர்வு பாராட்டுக்குரியதாகும். தமிழ்காக்கும் பணியில் தங்களின் நற்றமிழ்த் தொண்டும், போர்க்குணமும் என்றும் போல் தொடரும் என்பதை அறிவேன்.

- அன்பன் தமிழநம்பி, விழுப்புரம்.

'நற்றமிழ்' 15.2.2006 இதழ் கண்டேன். மகிழ்ச்சி. நன்றி. தமிழ் மாமணி விருதை அளித்த புதுவை முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கட்கும் விருதைப் பெற்ற தங்கட்கும் நடந்த பாராட்டு விழா பற்றியச் செய்தி படித்து மிகவும் மகிழ்ந்தேன். தங்கட்கு என் உளங்கனிந்த பாராட்டுகள்: வாழ்த்துகள். பல்லாண்டு வாழ்க! பன்னலமும் பெறுக. விழாவில் வெளியிடப்பட்ட தங்கள் வாழ்க்கை வரலாறும் தங்களைப் பற்றிய தமிழ்ச்சான்றோரின் வாழ்த்துகளுமடங்கிய புலவர் மு. இறைவிழியனார் வாழ்வும் பணியும் என்ற நூலைப் படித்திட விழைகின்றேன்.

- தங்க. சங்கரபாண்டியன்

## தலைநகர்த் தமிழ்ச்சங்கக் கட்டடக் கால்கோள் விழா

தி.ஆ. உ0௱௩எ சுறவம் ௧௬ ஆம் நாள் (29-01-2006) சென்னை வண்டலூரில் தலைநகர்த் தமிழ்ச்சங்கக் கட்டடக் கால்கோள்விழா சிறப்பாக நடந்தது. தலைநகர்த் தமிழ்ச்சங்கத் தலைமை அலுவலகமும் பேராசிரியர் ச. மெய்யப்பனார் நூலகமும் அமைக்கக் கால்கோள் விழா நடந்தது. தமிழ்ச் சான்றோர்களும் பல்வேறு இயக்கத் தலைவர்களும் விழாவில் கலந்து கொண்டனர். தலைநகர்த் தமிழ்ச்சங்கமும் தலைநகர்த் தமிழ்ச்சங்க அறக்கட்டளையும் ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தன. தலைமை அலுவலகமும் நூலகமும் சீரிய முறையில் அமைந்திட நற்றமிழ் வாழ்த்துகிறது.

## 'எழுகதிர்' ஆசிரியர் அரு. கோபாலனார் மடல்

ஐயாவைப்பற்றிக் கட்டுரையோ, கவிதையோ எழுதியனுப்பும்படி கடைசிநேரத்தில் எழுதினீர்கள். கட்டுரை எழுத நேரமின்மையால் கவிதை அனுப்பினேன். இப்போது 8-1-2006 விழாவுக்கு 6-1-2006க்கு அழைப்புவருகிறது. முன்கூட்டியே தெரிந்திருப்பின் மற்ற நிகழ்ச்சிகளை மாற்றியமைத்து வந்திருக்கலாம். இப்போது விருப்பமிருந்தும் வேறு நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொண்டிருப்பதால் வரமுடியாத நிலை. நிகழ்ச்சி சிறக்க நெஞ்சார வாழ்த்துகிறேன். இறைவிழியனார் இன்னும் பல விருதுகள் பெற்று நிறைவாழ்வு வாழ்க!

படிப்பகம்

www.padippakam.com



# செந்தமிழ் வளர்க்கும் செய்திகள்

❖ 12-01-2006இல் நண்பர்கள் தோட்டத்தில் சார்பில் புதுச்சேரி வேல். சொக்கநாதன் திருமண நிலையத்தில் தமிழ்நாள்காட்டி வெளியீட்டு விழா சிறப்பாக நடந்தது. தமிழ்ப்பாதுகாப்பு இயக்கத் தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் நாள்காட்டியை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

❖ தி.ஆ. உ0௬௯ சுறவம் (தை) ௯ ஆம் நாள் (22-01-2006) மறைமலை நகரில் தமிழர் திருநாள் - பொங்கல் பெருநாள் விழா சிறப்பாக நடந்தது. முனைவர் ம. நன்னன், முனைவர் பொற்கோ, உணர்ச்சிக் கவிஞர் காசி. ஆனந்தன் ஆகியோர் விழாவில் சிறப்புரையாற்றினர்.

❖ தி.ஆ.உ0௬௯ சுறவம் அ ஆம் நாள் (21-1-2006) வைரிசெட்டிப் பாளையம் திருக்குறள் பேரவையின் சார்பில் சீவக சிந்தாமணித் தொடர் சொற்பொழிவுத் தொடக்க விழா நடைபெற்றது. திருக்குறளன்பன் ஆ.வே.இரா. சொற்பொழிவு ஆற்றுகிறார்.

❖ தி.ஆ. உ0௬௯ சுறவம் (தை) உரு ஆம் நாள் (7-2-2006) முறம்பு - சீயோன் மலையில் பாவாணர் பிறந்த நாள் விழா - தமிழ் விழா திரு மா.செ. தமிழ்மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழாசிரியர் ஆ. நெடுஞ்சேரலாதன் விழாவினைச் சிறப்பாக நடத்தினார்.

❖ தி.ஆ. உ0௬௯ சுறவம் (தை) உ௩ ஆம் நாள் ( 5-2-2006) வாழியூரில் 27ஆம் ஆண்டுக் கம்பன் விழா சிறப்பாக நடந்தது. கவியரங்கம், பட்டிமண்டபம், பரிசு வழங்கல் என நிகழ்வுகள் அமைந்தன. வாழியூர் வே. இராச வேலனார் விழாவினைச் சிறப்பாக நடத்தினார்.

❖ மணற்பாறை திருக்குறள் பயிற்றகத்தின் 15-வது திருக்குறள் முழுநிலவுத் திருவிழா, நிறுவனர் புல்வர் திருக்குறள் நாவை. சிவம் தலைமையில் தி.பி. 2036 நளி-30 (15-12-2005) நகராட்சிப் பள்ளியில் நடைபெற்றது. வள்ளுவர் வாழ்த்து முற்றம், ஒருகுறள் சிந்தனை அரங்கம் 'கண்டதும் கேட்டதும்' என்ற தலைப்பில் வாழ்வியல் செய்தி முற்றம் சீருற நடைபெற்றது.

❖ மணற்பாறையில் - திருக்குறள் பயிற்றகத்தின் 28ஆம் ஆண்டுத் திருவள்ளுவர் திருவிழா மலரும் தி.பி. உ0௬௯ சுறவம் 2 (16-1-2005) திங்கள் மாலை மணற்பாறையில் திருக்குறள் பயிற்றகத்தின் 28ஆம் ஆண்டுத் திருவள்ளுவர் திருவிழா நிகழ்ந்தது முற்றோதுதல் - திருவள்ளுவர் பட வீதிஉலா - குறள் கருத்துமேடை - திருக்குறள் பரத நடனம் பாராட்டுப்பட்டயம் வழங்குதல் - திருக்குறள் போட்டிகட்குப் பரிசளிப்பு - சிறப்புரை நிகழ்ந்தன.

## பாராட்டு மடல்

தகைசான்ற உங்களுக்குத் தமிழ்மாமணி விருது கிடைத்திருப்பது. அறிந்து பெரு மகிழ்ச்சியுற்றேன். மேலும் பல விருதுகள் நீங்கள் பெற வேண்டும் என்ற என் விருப்பத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- புலவர். சக்கர. இராசாங்கம், நிரவி, காரைக்கால்.

படிப்பகம்

www.padippakam.com



## பாவரிமா இளஞ்சித்திரனாரின் பாராட்டு

அன்புடன் கெழுதகை நண்பர் புலவர் மு. இறைவிழியனார் அவர்கட்கு, வணக்கம்.

வாழி இதழ் (15-11-2005) இன்று வந்தது தங்களின் இதழ் வழிதான் ஒரு தித்திப்பு செய்தியைத் தெரிந்து கொண்டேன். சொல்லி முடியா மகிழ்ச்சியை நான் பெற்றேன்.

புதுவை அரசு தங்கட்கு அரசின் தனிஉயர் விருதான "தமிழ்மாமணி" விருதினைக் காலத்தில் வழங்கிப் பெருமை செய்துள்ளது. அதுவும் தன்னிலையில் பெருமைபெற்றுக் கொண்டுள்ளது. விருதினைப் பெற்ற தங்கட்கு என் நெஞ்சு கனிந்த வாழ்த்துகள். புதுவை அரசுக்கு எனது பாராட்டுகள்.

இதே தமிழ் நெஞ்சுடன் நீங்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து தொடர்ந்து எந்தமிழுக்கும், தமிழ் மக்கட்கும் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். வாழி வாழி.

(குறிப்பு : நான் தமிழ்மாமணி விருது பெற்ற செய்தி அறிந்து பாராட்டு மடல் எழுதியுள்ளார் பாவரிமா. ஆனால் அதனை அனுப்புதற்குமுன் அவர் இயற்கையெய்திவிட்டார். அவரின் மகள் தே. தென்மொழி அப்பாராட்டு மடலை 23-2-2006 இல் அனுப்பியுள்ளார். அவர்க்கு நன்றி! - இறைவிழியன்.)

## புலவர் ஆறு. அரங்கண்ணல் பரிசு பெற்றார்

ஐதராபாத்து நிறை இலக்கிய வட்டம் நடத்திய மரபு கவிதைப் போட்டியில் நற்றமிழன்பர் புலவர் ஆறு. அரங்கண்ணல் அவர்கள் மூன்றாவிது பரிசு பெற்றுள்ளார். பரிசு பெற்ற புலவரை நற்றமிழ் வாழ்த்துகிறது.

## கிளமெண்டு ஈசுவர் அறக்கட்டளையின் இளங்கவி அம்பிகாபதி பாடற் பரிசு

இளங்கவிஞர்களை மரவு பாடல் இயற்றுவதற்கு ஊக்கப் படுத்தும் வகையில் 'நற்றமிழ்' இதழில் வெளியாகும். கொடுத்தபடி தொடுத்த பாடல்களில் பள்ளி, கல்லூரி மாணவரின் சிறந்த இரண்டு பாடல்கட்கு முறையே உரு. 200/-உரு. 150/- பரிசாக அளிக்கப்படும். மேழம் (சித்திரை) திங்களில் வெளியாகும் பாடல்களில் இருந்து பரிசுக்குரிய பாடல்கள் தேர்வு செய்யப்படும். மேற்கண்ட இளங்கவி அம்பிகாபதி பாடற் பரிசுக்காக உரு. 5000/- வைப்பகத்தில் வைப்புத் தொகையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பயன் துய்க்குமாறு மாணவரை வேண்டிக் கொள்கிறோம். பரிசு பெற்ற மாணவர் மீன்டும் பரிசு பெறத் தேர்வு செய்யப்பட்டார். - ஆசிரியர்

www.padippakam.com

AIR MAIL

நற்றமிழ்-திங்களிதழ்
NATRAMIZH-MONTHLY

பதிவு எண். புது.த.தி./2000/4265
Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா. / அ.து.த 128 / 06-08. திங்கள் தோறும்
15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) / 128/06-08. Posted
at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

**அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post**

**LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP
NO. SSP / PY / 128 / 06-08**

பெறுநர் :
திரு.

**N. MURALY**
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
**Danmark.**









2-2-2006 - இல் புதுவையில் நல்லாசிரியர் புலவர் வை. பாவாடை அவர்களின் 80 அகவை நிறைவு விழா முத்து விழா சிறப்பாக நடைபெற்றது. புலவர் வை. பாவாடை - உலோகநாயகி இணையர் நலத்துடன் வாழ நற்றமிழ் வாழ்த்துகிறது. தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனார் முத்துவிழா இணையரை வாழ்த்துகிறார்.

| | | |
|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — உரு | 6.00 |
| ஆண்டுக் கட்டணம் | — உரு | 75.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — உரு | 600.00 |

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. தொலைப்பேசி : (0413) 2203765 கைப்பேசி : 98942-25129

Printed by **N. Elampuranan**, Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan**, Telephone : (0413) 2203765 **Cell : 98942 - 25129**

படிப்பகம்